"ஈசன் நெறிபரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

# கலசம்
# KALASAM

சித்திரை - வைகாசி - ஆனி - 2022



ISSN 2055-6616

சுபகிருது வருடமே வருக!

இலண்டனிலிருந்து இலவசமாக வெளிவரும் முதல் ஆன்மிகக் காலாண்டிதழ்

MSR GROUP
EST 2005

# MSR GROUP

Chartered Management Accountants

## OUR SERVICES:

- **Accounting & Business Services**
- **Tax Consultancy**
- **Tax Investigation**
- **Locums & Umbrella Payroll**
- **Property Consultancy**
- **Mortgages**
- **Pension & Investment**
- **Insurance**
- **Will & Probate Services**

CELEBRATING 15 YEARS OF EXCELLENCE
2005 · 2020

The Parliamentary Review
BEST PRACTICE REPRESENTATIVE

Best Practice Representative Selected by Parliamentary Review

Head office:
MSR House, 329 Ley Street
Ilford
Essex
IG1 4AA

Regional office:
MSR Chamber, 349 Ley Street
Ilford
Essex
IG1 4AA

Contact:
T: 020 8514 2678
F: 020 8514 6963
E: office@msrgroup.org.uk
W: msrgroup.org.uk

மணி 30

# கலசம்
KALASAM

ஒலி 102

www.saivamunnettasangam.com

Charity Registration No:292085

FREE ISSUE

**கலசம்**
**நிருவாகக் குழு**

**ஆசிரியர்**
க ஜெகதீஸ்வரன்

**உதவி ஆசிரியர்கள்**
சி அற்புதானந்தன்
சுதர்சினி வாகீசன்

**விநியோகம்**
சோ நிரஞ்சன்
சு இரத்தினராஜா

**விளம்பரம் நிருவாகம்**
மா இந்துசேகரன்
வ இ இராமநாதன்

**இலங்கைத் தொடர்பு**
வை சிவனருட்செல்வர்
**தொலைபேசி**
0766167547
**மின்னஞ்சல்**
svarul@yahoo.co.uk

**வெளியீடு**
சைவ முன்னேற்றச் சங்கம்

**முகவரி**
SMS
2 Salisbury Road
Manor Park
London E12 6AB

Tel:
020 8514 4732

**மின்னஞ்சல்**
email:
smsukkalasam@gmail.com

# கோயில்கள் களியாட்டு இடங்கள் அல்ல!

அண்மையில் சமூக வலைத்தளத்தில் ஒரு பதிவைப் பார்க்க நேர்ந்தது. பார்ப்போரைப் பதறவைக்கும் பதிவு. பெண் ஒருவர், கோயிலில், ஏற்றிய தீபங்கள் இரண்டைக் கைகளில் ஏந்தியபடி செல்கிறார். சந்நிதியை அடைந்ததும் குனிந்து ஒரு தீபத்தை வைக்கிறார். விரித்துக் கிடந்த அவரின் தலைமுடி முன்னால் விழுந்து, மற்றைய கையிலே இருந்த தீபத்திலே பட்டவுடன் தீப்பற்றி எரிகிறது. அருகில் இருந்தவர்கள் ஓடிச்சென்று தீயை அணைத்து அவரைக் காப்பாற்றுகிறார்கள். இதைப்போல முன்னரும் வேறு சில கோயில்களில் பெண்களின் தலைமுடி, தோளிலே அணிந்த துப்பட்டா, சேலை போன்றவை தீப்பிடித்த சம்பவங்கள் பலமுறை நடந்துள்ளன.

ஒரு இடத்துக்குப் போகும்போது என்ன உடை அணியவேண்டும், எப்படித் தலைமுடியைக் கட்டவேண்டும் என்று கட்டுப்பாடுகள் சமூகங்களிடையே இருக்கின்றன. பண்பாடு, பாதுகாப்பு என்பன கருதியே அவை உள்ளன. ஆனால் நாம் அவற்றில் அவ்வளவாக அக்கறை கொள்வதில்லை. கட்டுப்பாடுகளை மூடநம்பிக்கை என்றோ, அடக்குமுறை என்றோ காரணம் காட்டி ஒதுக்கி விடுகிறோம். திருமணமோ, திருவிழாவோ, நாகரிகம் என்ற பெயரில் பொருத்தமற்ற ஆடை அணிவது, தலைமுடியை விரித்துவிடுவது என எப்படியெல்லாமோ போகிறோம். மேற்கு நாட்டவர்கள் அப்படியல்லர். கட்டுப்பாடுகளுக்குக் கட்டுப்படுவதில் நாட்டம் அதிகம் காட்டுவார்கள். விழாவுக்கு ஏற்றபடி, இடத்துக்கு ஏற்றபடியே உடை அணிவார்கள்.

ஆண்களாக இருந்தாலும் சரி, பெண்களாக இருந்தாலும் சரி, பொருத்தமான உடை அணிந்து, நீண்ட முடி இருந்தால் அதை ஒழுங்காக் கட்டிச் செல்வது நல்லது. இது பாதுகாப்பாக இருக்க உதவும். சேலை போன்ற நழுவக்கூடிய ஆடை அல்லது வேறு நழுவி விழக்கூடிய ஆடைகளை அணிந்தால் அவற்றைச் சரியாக அணிவது பாதுகாப்பாக இருக்கும். அதைப்போலவே தலை முடியைக் கட்டுவதும் முக்கியம்.

கோயில்கள் வழிபாட்டுக்கான இடங்களேயன்றிக் களியாட்டு இடங்கள் அல்ல. கோயில்களில் தீபங்களை ஏற்றி வைத்திருப்பார்கள். திருமணங்களில் ஆரத்தி எடுப்பார்கள். எனவே அவற்றுக்கு அருகிலே போகும்போது நாம் கவனமாக இருக்கவேண்டும் அதனால், தலைமுடியை விரித்துவிடாமல், பொருத்தமான உடை அணிந்து செல்வது அனைவருக்கும் நல்லது.

**க ஜெகதீஸ்வரன்**
**ஆசிரியர்**

# இந்த இதழில்

"ஆணை நமதே" 03

மெய்ஞ்ஞானக் கல்வி 07

பெரியோரின் பிள்ளைகள் - கந்தபுராணச் சிந்தனைகள் 09

அறிவோம் ஆன்மிகம் 11

தட்சிணாமூர்த்தியும் குருவும் 12

திருவானைக்கா - பயணக் கட்டுரை 13

யோகசுவாமிகள் போதனைகள் 17

திருப்புகழ் கிடைத்த கதை 21

தானமும் தருமமும் 28

பாஞ்சாலி சபதம் 30

ஆனாயநாயனார் 33

திருக்குறள் கதைகள் 36

நற்சிந்தனை 38

Vegetarianism 40

கண்ணனும் தாத்தாவும் 47

**அட்டைப்படம்: சிவன்கோயில் (ஆவரங்கால்)**

**அட்டைப்படம்: வடிவமைப்பு - குகன்**

**கட்டுரைகளில் உள்ள கருத்துக்களுக்குக் கட்டுரையாளரே பொறுப்பாவர்**

# ‘ஆணை நமதே’

## இடைக்காடு சயம்பு



“ஆணை” என்ற சொல்லுக்குக் கட்டளை, சத்தியம், உறுதி என்ற பொருள்கள் அமையும். திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் தமது பாடல்களிலே ஐந்து இடங்களில் பயனும் சொல்லி “ஆணை நமதே” என்று முடிக்கிறார். இலம்பயங்கொட்டுர் பதிகத்தில் பத்துப் பாடல்களில் “எனதுரை தனதுரையாக” என்று உறுதி பண்ணியிருக்கிறார். இந்தக் கூற்றையும் “ஆணை நமதே” என்று எடுக்கலாம். “ஆணை நமதே” என்று அவர் அறுதியிட்டுக் கூறுவதற்குத் தகுதி என்ன, காரணம் என்னவென்று ஆராய்ந்து பார்ப்போமானால் நாயனாரும் இறைவரும் வேறல்லர் என்ற உண்மை விளங்கும். நாயனாருடைய சரித்திரம் முழுமையையும் அவருடைய தேவாரப் பாடல்கள் முழுவதையும் சேர்த்துப் பார்த்தால் இது நன்கு புலனாகும். திருத்துருத்தித் தலத்திலே பாடிய ஒரு பாடலிலே நாயனார் தனது முற் பிறவியின் கடைசிக் காலப் பரஞான நிலையைக் காட்டுகிறார்.

துறக்குமா சொலப்படாய் துருத்தியாய் திருந்தடி
மறக்குமா றிலாதவென்னை மையல்செய்திம் மண்ணின்மேல்
பிறக்குமாறு காட்டினாய் பிணிப்படும் உடம்பு விட்டு
இறக்குமாறு காட்டினாய்க் கிழுக்குகின்ற தென்னையே?
(திருமுறை 2, பதிகம் 98, பாடல் 5)

மறக்குமாறிலாதவென்னை - இறைவனையன்றி வேறு நினைப்பின்றித் தானே அவனாக நின்ற நிலையைக் குறிக்கிறார். சீவன்முத்தர் நிலைக்கும் மேலான நிலை இது. வாசானமலந் தாக்காத நிலை. ஒரு நோக்கத்தோடு இறைவன் இவரை அவதரிக்கப் பண்ணினார். “நாயனாருடைய அவதாரம் பிரமன் படைப்பன்று; இறைவன் படைப்பு” என்று அறிஞர்கள் சொல்வார்கள். “ஞானப் பால் ஊட்டியது” என்றால் ஞாபகப்படுத்தி ஊக்கப்படுத்த என்று கொள்ளவேண்டும். இந்தத் தேவாரப் பாடலைப் போற்றிச் சேக்கிழார் பாடிய பாடலிலே (திருஞானசம்பந்தர் 55) “பண்டு திருவடி மறவாப் பான்மையோர்” என்றார். நாயனார் அவதரிக்கும்போதே ஞானியாய் இருந்தார். இறைவர் தமது கருத்துக்களை நாயனார் மூலம் வெளிப்படுத்தினார்.

**இலம்பயங்கோட்டூர்:** தி1 பதி 76, - “எனதுரை தனதுரையாக” - நாயனார் திரு இலம்பயங்கொட்டூர் தலத்தில் பாடிய பதிகம் சிறந்த சைவசமய உண்மைகளைக் கூறும் பாடல்களைக் கொண்டது. பத்துப் பாடல்களில், “எனதுரை தனதுரையாக” என்ற முத்திரையைப் பதித்து வைத்தார். நான்காவது பாடலில் “விளம்புவான் எனதுரை தனதுரையாக” என்று விளக்கமாய்க் குறித்தார். மூன்று பாடல்களில் வேறு தலங்களைக் குறிக்கிறார். இந்தக் குறிப்பு அத்தலங்களை நாம் நினைக்கவும் வழிபடவும் உதவும். (பாடல்கள் 1,2,4) ஐந்தாவது பாடலிலும் ஏழாவது பாடலிலும் இறைவன் அட்டமூர்த்தமாய்க் காட்சிதரும் நிலையைக் குறிக்கிறார். இறைவனின் எங்கும் நிறைந்த தன்மையை இது குறிக்கும். அத்துடன் ஐந்தாவது பாடலில் “தேனுமாய் அமுதுமாய்த் தெய்வமுந் தானாய்” என்று உலகியல் இன்பத்தையும் முடிவிலின்பத்தையும் கொடுப்பார் என்று உறுதி சொல்கிறார்.. ஆறாவது பாடலில் அடியவர்க்கருளும் பொருட்டே இறைவர் பிச்சை எடுக்கும் வேடம் போடுவார் என்கிறார். ஒன்பதாவது பாடலில் “உளமழை எனதுரை தனதுரையாக” என்ற சொல்லாட்சியிலே ஓரழகு இருக்கிறது. “உளமழை” என்ற இந்தச் சொல்லாட்சியிலே இலக்கிய

நயமும், பத்தி நயமும், உண்மையும் இருக்கின்றன. உளம் அழை; உளம் மழை; உள்ளத்தினின்று அருள் மழைபோல் வெளிப்படும் இந்த உரை, உள்ளத்துள் நின்று அழைக்கும் இறைவனுடைய உரையாகும்.

கடைக்காப்புப் பாடல்:

கந்தனை மலிகனை கடலொலி யோதங் கானலங் கழிவளர் கழுமலம் என்னும்
நந்தியா ருறைபதி நான்மறை நாவன் நற்றமிழ்க் கின்றுணை ஞானசம்பந்தன்
எந்தையார் வளநகர் இலம்பையங் கோட்டூர் இசையொடு கூடிய பத்தும் வல்லார்போய்
வெந்துயர் கெடுகிட விண்ணவ ரோடும் வீடுபெற் றிம்மையின் வீடெளிதாமே

மறையவனாய்ப் பிறந்த ஞான சம்பந்தன், நற்றமிழுக்கு உற்ற துணைவனாய இறைவன் சொன்ன மறையின் கருத்துக்களைத் தமிழில் உரைத்தேன். இவற்றைப் பண்ணுடன் பாடி வணங்குபவர்கள் நற்கதி பெறுவர்.

**திருநனிபள்ளி:** திருமுறை 2 பதிகம் 84

இந்தத் திருத்தலம் திருஞானசம்பந்தரின் தாயாரின் ஊர். இந்த ஊரைச் சார்ந்த நிலம், இயற்கையாக வரண்ட பூமியாக இருந்தது. தலத்தைத் தரிசிக்கப் போகும் நாயனார் தந்தையாரின் தோளில் இருந்தபடியே, “வானணையு மலர்ச் சோலை தோன்றுவ தெப்பதி?” என்று கேட்டார். தந்தையார் “பானல் வயற்றிரு நனிபள்ளி” என்று பதில்சொன்னார். நாயனார் அவ்விடத்தில் இருந்தே பாடத்தொடங்கினார். முதற் பாடலில் பாலை நிலம், முல்லை நிலம், நெய்தல் நிலம் ஆகிய வளங்கள் சேர்ந்த நிலமென்று குறித்தார். பின்னால் வரும் பாடல்களிலும் எல்லா நிலப் பண்புகளும் வளங்களும் தோன்றப் பாடினார். கடைக்காப்பில்

“இடுபறை யொன்றவத்தர் பியன்மே லிருந்தின் இசையாலு ரைத்த பனுவல்
நடுவிரு ளாடுமெந்தை நனிபள்ளி உள்க வினைகெடுத லாணை நமதே”

என்று உறுதியளித்தார். பின்னால் அந்தப் பதி செழிப்பான பூமியாய் மாறிற்று. நாயனார் சரித்திரத்தில் நிகழ்ந்த மூன்றாவது அற்புதம் நனிபள்ளியில் நிகழ்ந்தது. சிவதலங்களை நினைத்தாலே பயனுண்டு என்ற பொருளில் “ஆணை நமதே” என்றார்.

**கோளறு பதிகம்:** திருமுறை 2 பதிகம் 85

திருமறைக் காட்டில் மடத்திலிருந்து பாடிய இப்பதிகம் “கோளறு பதிகம்” என்று புகழ் பெற்றது. பிள்ளையார் மதுரைக்குப் போக விரும்பினார். அப்பர் (நாவுக்கரசர்) தடுத்தார். “சமணர் வஞ்சகர், தீங்கு செய்வர். நீரோ சிறு பிள்ளை. பதிலாக நான் போகிறேன்” என்றார். அப்போது பிள்ளையார், அப்பரைத் தேற்றி இப்பதிகத்தைப் பாடினார். ஒவ்வொரு பாடலிலும் சிவன் என் உள்ளத்திலே இருக்கிறபடியால் தீது ஏதும் வாராது என்று வலியுறுத்திச் சொன்னார். அப்பரும் ஏற்றுக்கொண்டார். முதலாவது பாடலிலே கிரகங்கள் ஒன்பதும் அடியார்க்குத் தீங்கு செய்யா என்றார். இரண்டாவது பாடலிலே பயணஞ்செய்ய ஆகா என்று விலக்கப்பட்ட நாள்கள் எம்மைப் பாதிக்கமாட்டா என்றார். மூன்றாவது பாடலிலே சிறு தெய்வங்கள் எல்லாம் நன்மையே செய்வர் என்றார். நான்காவது பாடலில் இயமனும் நெருப்பும் நோய்களும் கெடுதல் செய்யமாட்டா என்றார் ஐந்தாவது பாடலிலே அசுரர் (அசுர குணம் படைத்தோர்), இடி மின்னல் இயற்கையின் சீற்றம் எம்மைப் பாதிக்கமாட்டா என்றார். ஆறாவது பாடலில் பொல்லா மிருகங்கள் பாம்பு முதலியவற்றால் ஏற்படும் அபாயம் வாராது என்றார் ஏழாவது பாடலிலே இராவணன் (கொடிய அரசன்) போன்றோரால் கெடுதி வாராது என்றார். ஒன்பதாவது பாடலில் திருமால் முதலிய

பெருந்தேவர்கள் உதவுவர். கடல் மலைகளால் ஆபத்து இல்லை என்றார். மாறி மாறி வருங் காலங்கள் பாதிக்கமாட்டா என்றார். பத்தாவது பாடலில் பாண்டிய நாட்டுக்குப் போகும் நோக்கம் புத்தர், சமணரை வாதில் வென்று அவர்கள் வலிமையை நலியச் செய்து சைவத்தை மீட்கவென்றும் அதற்குத் திருநீறு உதவும் என்றும் கூறினார். கடைக்காப்புப் பாடலில் கலைஞானமும் பரஞானமும் பெற்ற ஞானசம்பந்தன் அடியார்கள் துன்புறாவண்ணம் காப்பாகச் சொன்ன இப்பாடல்களை ஓதும் அடியார்கள் வானுலகில் அரசர்களாய் இருப்பார்கள்; "இது நமது கட்டளை" என்று பாடி முடித்தார்

வாழ்க்கையில் ஏற்படும் இன்னல்களை ஒவ்வொன்றாகச் சொல்லி அவை அடியாரைப் பாதிக்க மாட்டா என்று அபயங் கூறியவர் முடிவாக ஆணையிட்டும் நிச்சயப்படுத்திவிட்டார். வானுலகில் அரசர்களாய் இருப்பார்கள் என்றது முத்தியடையும் வழியிலே முன்னேறுவர் என்பதாகும். சிவனும் சக்தியும் கலந்து நிற்கும் மூர்த்தத்தை முன்னிலைப் படுத்தி ஓதிய இப்பதிகத்தைக் கிரமமாய் பத்தியோடு இசையுடன் ஓதி வந்தால் தீமையெல்லாம் நீங்கி முத்திக்குப் போவார்கள். பயணஞ்செய்வோர்க்கு இப்பதிகம் உறுதியான வழித்துணை. நாட்பட்ட நோயாளர்கட்கு இது அருமருந்தாகும்.

***திருவெண்காடு:*** *திருமுறை 3 பதிகம் 15*

இப்பதிகத்தில் இறைவருடைய தடத்தமேனிக் கோலங்களை நயப்புறக் காட்டியும், அவருடைய எல்லாம் வல்ல தன்மையை அறிவித்தும், இப்பதிகத்தை ஓதுவதால் ஆகும் நற்பயனையும் கூறி ஆணையிட்டும் உறுதிப்படுத்தியிருக்கிறார்.

"சொல்லிய அருந்தமிழ் பத்தும் வல்லவர்
அல்லலோ டருவினை யறுத லாணையே"

இப்பதிகம் பொருள்விளங்கவும் மனனம் பண்ணவும் சுகமானது.

***திருவேதிகுடி:*** *திருமுறை 3 பதிகம் 78*

இந்தப் பதிகம் சிறப்பான கருத்துக்கள் உடையது. விரும்பிப் பாடக்கூடிய இசை சாதாரிப்பண்ணில் அமைந்துள்ளது. முதலாவது பாடலில் இறைவனின் முழுமுதன்மையைக் கூறுகிறார். இரண்டாவது பாடலில் எல்லாம் வல்ல தன்மை கூறுகிறார். மூன்றாவது, நான்காவது பாடல்களில் அழகான தடத்த மேனியும், அலங்காரங்களும் வருகின்றன. ஐந்தாவது பாடலில் முப்புரம் எரித்த வீரத்தைச் சொல்கிறார். ஆறாவதில் "ஐயமிடுமன்று மங்கை யொடகந் திரியும் அண்ணல்" என்று இறைவன் பிச்சை எடுக்கும் அருளற்புதத்தைக் குறிக்கிறார். இதிலே ஒரு சுவையுள்ளது. அண்ணல் என்று குறிப்பிடுகிறார், ஆனால் இறைவரோ பிச்சை எடுக்கிறார். அதுவும் தான் தனித்துப் பிச்சை எடுப்பது போதாதென்று அம்மையையும் கொண்டு திரிந்து பிச்சை எடுத்தார் என்பது சுவைக்கக்கூடிய அமைப்பு. அம்மையுடன் பிச்சை ஏற்ற இடத்திலுள்ள அடியவர்க்கு உடனே முத்திப்பேறு கிடைக்கும் என்பது இதன் உண்மையான பொருள். இப்பாடலின் நான்காவது அடியில் புலவருக்கு அன்பாயிருக்கும் வகையையும் கூறுகிறார். ஏழாவது பாடலில் வரும்

"கன்னியரொ டாடாவர்கண் மாமணம் விரும்பியரு மங்கல மிக
மின்னியலு நுண்ணிடைநன் மங்கையரி யற்றுபதி வேதிகுடியே"

"வேதிகுடியே" என்ற வரியில் ஒரு சிறப்பான செய்தி சொல்கிறார். அந்தக் காலத்துப் பெண்களின்

கல்வி மேன்மையை இங்கே குறிக்கிறார். திருமணச் சடங்கியற்றும் தகுதி வாய்ந்த பெண்டிர் இருக்கும் திருவேதிகுடி என்றார்.

இனித் திருக்கடைக்காப்புப் பாடலைப் பார்ப்போம்:

கந்தமலி தண்பொழி நன் மாடமிடை காழிவளர் ஞானமுணர்சம்
பந்தன்மலி செந்தமிழின் மாலைகொடு வேதிகுடி யாதிகழலே
சிந்தை செய வல்லவர்கள் நல்லவர்கள் என்னநிகழ் வெய்தி யிமையோர்
அந்தவுல கெய்தியர சாளுமது வேசரத மாணை நமதே

பதிகப்பயன் உண்மையென்றும் அது தனது ஆணையென்றும் அழுத்தி உரைத்து வைத்தார். பதிகத்தின் பத்துப் பாடல்களிலும் வேதிகுடியே என்று குறித்து வந்தவர் கடைக்காப்பில் ஆணை நமதே என்று முடித்துவைத்தார். வேதிகுடியே, வேதிகுடியே என்று கூறிவந்த காரணம் அந்தத் தலத்தின் சிறப்பு பாடல்களில் விளக்கமாய்க் காணலாம். இது யாத்திரை செய்யவேண்டிய தலம்.

**திருக்கழுமலம்:** திருமுறை 3 பதிகம் 118

திருக்கழுமலப் பதிகத்தில் நாயனார் விதந்து கூறியவை:
சிவன் விரும்பிச் சூடும் மலர்கள், இலைகள், தக்கன் யாகத்தை அழித்த வீரம், மரக்கலம் முதலிய கடற் செல்வம், முப்புரம் எரித்த வீரம், சோலைகள் நந்தவனங்களின் சிறப்பு ஆகும்

கடைக்காப்புப் பாடலில் இப்பதிகத்தை
"......நன்மையால் உரைசெய்து நவில்வார் வானிடை வாழ்வர்,
மண்மிசைப் பிறவார் மற்றிதற் காணையும் நமதே" என்று முடிக்கிறார்.

**திருப்பிரமபுரம்**: திருமுறை 3 பதிகம் 67

கடைக்காப்பில் நாயனார் இப்படிக்கூறுகிறார்.

"...கழுமல நகர்ப்
பழுதிலிறை எழுதுமொழி தமிழ்விரகன், வழிமொழிகண் மொழிதகையவே"

இறைவர் எழுதிய தமிழழை நான் வழிமொழிந்தேன். நீவிர் ஓதுவீராக!; நன்மையடைவீர். "எனதுரை தனதுரையாக" என்ற மாதிரி இங்கும் ஆணையிட்டார்.

திருச்சிற்றம்பலம்
தேனமர் பொழில்கொளாலை விளைசெந்நெல் துன்னி வளர்செம்பொன் எங்கும்நிகழ
நான்முகன் ஆதியாய பிரமா புரத்து மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளுநாளும் அடியாரை வந்து நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொல் மாலையோதும் அடியார்கள் வானில் அரசாள்வர் **ஆணை நமதே**
திருச்சிற்றம்பலம்

## பிழை திருத்தம்

**சென்ற கலசம் இதழில் (தை-மாசி-பங்குனி 2022) வெளிவந்த "கிராமிய வழிபாடு" என்னும் கட்டுரையை எழுதியவர் செல்வி இ.கிருபிகா ஆவார். தவறுதலாக செ.கிருபிகா என அச்சிடப்பட்டுள்ளது. இத்தவறுக்கு வருந்துகிறோம்**
**- ஆசிரியர்**

# மெய்ஞ்ஞானக்கல்வி

## "தில்லையூரான்"

தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார் அருளிய திருக்குறள் நூல் - அறம், பொருள், இன்பம்- என முப்பாலாக வகுக்கப்பட்டுள்ளது. பொருட்பாலில், இறைமாட்சி என்ற அதிகாரத்தில், ஒரு நாட்டை ஆளும் அரசனுக்கு இருக்கவேண்டிய உறுப்புக்களில் அறிவாற்றலும் நற்குண நற்செயலும் முக்கியமாகக் கருதப்படுகின்றன. அதைத் தொடர்ந்து கல்வி கல்லாமை என்ற இரண்டு அதிகாரங்கள் உடன்பாடு எதிர்மறை முகமாக அமைக்கப்பட்டுள்ளன. இதனால் கல்வியின் அத்தியாவசியத்தை அரசனுக்கு மட்டுமன்றி பொதுமக்களுக்கும் வலியுறுத்தப் பட்டுள்ளது. ஔவைப்பாட்டி கற்றோர் சபையில் ஒரு கல்வி கல்லாதவனை "நீட்டோலை வாசியான் மரம்" என்று எள்ளி நகையாடுகிறார். கல்வி "மம்மர் அறுக்கும் மருந்து" என்று நாலடியார் போதிக்கின்றது.

கல்வி மெய்ஞ்ஞானக்கல்வி, தொழில் நுட்பக்கல்வி, விஞ்ஞானக்கல்வி, கலைக்கல்வி, சமூகக்கல்வி, புவியியல் கல்வி, என்று பலதுறைகளாக விரிந்து செல்லுகின்றது. இதனாலன்றோ "கல்வி கரையில கற்பவர் நாட்சில" என்றும், "கல்வி என்னும் பல்கடல் பிழைத்தும்" என்றும், "சாந்துணையும் கல்லாதவாறு" என்றும் சான்றோர்கள் கூறிச் சென்றனர். திருவள்ளுவ நாயனார் கடவுள் வாழ்த்து என்ற முதல் அதிகாரத்தில் இரண்டாவது குறளாக,

"கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்"

என்ற குறளை அமைத்துள்ளார்.

ஒருவன் வருந்திக் கற்ற கல்வியின் பயன், வாலறிவனும் பேரறிவாளனுமாகிய கடவுளின் வீடு பயக்கும் திருவடிகளைத் தொழுது வழிபடுதல் என்று வற்புறுத்தியுள்ளார். இதில் கூறப்பட்ட கல்வி மெய்ஞ்ஞானக்கல்வி என்பது தேற்றம். மெய்ஞ்ஞானக்கல்வியைக் கற்றோர் அதனை மேடைகளில் சொற்பெருக்காற்றி தங்களின் வித்துவ ஆற்றலை வெளிச்சம் போட்டுக் காட்டுவதைக் கைவிட்டு கடவுளின் மாட்சிமை பெற்ற திருவடிகளைத் தொழுது வணங்கி பிறவி அறுக்க வேண்டும் என்பதே வள்ளுவரின் உட்கிடக்கை என்பது தெளிவாகிறது.

இதையே முருகக் கடவுளின் அருள்பெற்ற அருணகிரிநாத சுவாமிகள் கந்தர் அலங்காரம் என்ற திருப்புகழ் தொகுப்பில்,

"யாமோதிய கல்வியும் எம்மறிவும்
தாமே பெற வேலவர் தந்ததனால்
பூமேல் மயல் போய் அறமெய்ப் புணர்வீர்
நாமேல் நடவீர் நடவீர் இனியே"

என்று எமக்கு எச்சரிக்கை செய்துள்ளார்.

இனி, மனிதகுலம் மெய்ஞ்ஞானக் கல்வியைக் கற்று, கற்றாங்கு ஒழுகவேண்டிய கடப்பாடு பற்றிச் சிந்திப்பதே இந்தக்கட்டுரையின் நோக்கமாகும்.

மெய்ஞ்ஞானக்கல்வி என்றும் அழியாத நித்திய நிரதிசய மெய்ப்பொருள்களாகிய மூன்று உண்மைகளைப் பற்றிய கல்வியே என்பதைத் திருமூலநாயனார் திருமந்திரம் உபதேசக் காண்டத்தில் தெளிவு படுத்தியுள்ளார்.

"பதி பசு பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப் போல பசுபாசம் அநாதி
பதியினைச் சென்றணு காப்பசு பாசம்
பதியணு கிற்பசு பாசம்நில் லாவே"

என்ற பாடலாகும். இதனைச் சைவ சித்தாந்த அடிப்படைத் தத்துவம் என்றும் மெய்கண்ட சாத்திரப் பிழிவு என்றும், வேதாகம சாரம் என்றும் அறிஞர் கூறுகின்றனர். மெய்கண்ட சாத்திரங்கள் 14 ஆகும். அவையாவன:

1. சிவஞானபோதம் 2. சிவஞானசித்தியார் 3. சிவப்பிரகாசம் 4. திருவுந்தியார்
5. திருக்களிற்றுப்படியார் 6. இருபாஇருப∴து 7. உண்மை விளக்கம்
8. போற்றிப்ப∴றொடை 9. உண்மைநெறி விளக்கம் 10. சங்கற்ப நிராகரணம்
11. வினாவெண்பா 12. நெஞ்சுவிடுதூது 13. கொடிக்கவி 14. திருவருட்பயன்

இவைகளில் காலத்தால் முற்பட்டவை திருவுந்தியாரும், திருக்களிற்றுப்படியாரும் ஆகும். அ∴து, அவ்வாறு இருந்த பொழுதும் சிவஞானபோதம் சைவசித்தாந்தத்தின் முதல் நூல் என்றும், சிவஞான சித்தியார் வழி நூல் என்றும் சிவப்பிரகாசம் சார்பு நூல் என்றும் அறிஞர்கள் வகுத்துள்ளனர். அனைத்து மெய்கண்ட சாத்திர நூல்களையும் ஒரு ஆசானிடம் கற்றுத்தெளிய ஒருவரின் ஆயுட்காலம் போதாது என்று கூறலாம். ஆயினும் சிவஞான போதத்தையோ அல்லது சிவஞான சித்தியாரையோ ஒரு ஞான தேசிகரிடம் கற்றுத்தெளிய வேண்டியது ஒவ்வொரு சைவ சமயத்தைக் கைக் கொண்டவர்களின் கடப்பாடு என்று கூறமுடியும். திருமுறைகளிலும் சைவ சித்தாந்தத்திலும் கூறப்படும் உண்மைகளை ஆராய்ந்து அவைகளை உணர்ந்து அதன்படி ஒழுகி மனிதகுலம் பிறப்பறுக்க வேண்டும் என்பதே அருளாளர்களின் வேணவாவாகும். மெய்ஞ்ஞானக்கல்வி ஆன்மிக விடுதலை நோக்கிப் பயணிக்கும் ஒவ்வொருவருக்கும் எவ்வளவு அவசியம் என்பதைத் திருவாசகத்தில் மாணிக்கவாசக சுவாமிகள் "கண்டபத்து" என்ற பதிகத்தில் வற்புறுத்தியுள்ளார். அந்தப்பாடல்,

"கல்லாத புல்லறிவிற் கடைப்பட்ட நாயேனை
வல்லாள னாய்வந்து வனப்பெய்தி இருக்கும் வண்ணம்
பல்லோரும் காண என்றன் பசுபாசம் அறுத்தானை
எல்லோரும் இறைஞ்சுதில்லை அம்பலத்தே கண்டேனே"

என்பதாகும்.

இந்தப் பாடலில் "கல்லாத புல்லறிவிற் கடைப்பட்ட நாயேனை" என்ற சொற் தொடருக்கு திருவாசக ஆராய்ச்சி உரை எழுதிய பண்டிதமணி அருளம்பலனார் அளிக்கும் விளக்கம், "ஞான நூல்களைக் கற்று அறிவுபெறாத அற்ப அறிவினையுடைய கீழ்ப்பட்ட நாயனைய என்னை" என்பதாகும். இதனால் மெய்ஞ்ஞானக்கல்வி சைவசமய சாதகர்களுக்கு எவ்வளவு அவசியம் என்பது தெளிவாகிறது.

இறுதியாக, "கடுகைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிச் சிறுகத் தறித்த குறள்" ஒன்றைப் பார்ப்போம்.

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி" குறள் 358

# பெரியோரின் பிள்ளைகள்

## கந்தபுராணச் சிந்தனைகள்

**கலாநிதி ச சிவலோகநாதன்**

சித்திரை மாதத்தில் வருகின்ற பௌர்ணமி தினத்தன்று, யாழ்ப்பாணப் பகுதிகளிலே உள்ள ஆலயங்களிலே மாகேசுர பூசை நடைபெறும். அன்று சித்திரபுத்திரனார் கதையும் பசுவின் கதையும் படிக்கப்படும்.

பசுவின் கதையின் சுருக்கம் வருமாறு:

ஒரு வீட்டுப் பசு காலையிலே கன்றுக்குட்டிக்கும் எஜமானனுக்கும் பாலைக் கொடுத்துவிட்டு, இரைதேடி மேய்ச்சலுக்கு காட்டுக்குச் செல்கிறது. நன்றாக மேய்ந்துவிட்டு வீடு திரும்பும் மாலை நேரத்தில் அதனை ஒரு புலி பிடித்துக் கொள்கிறது. தன்னுடைய பசியின் வேகம் தள்ளப் புலி அதனைக் கொல்லப் போகின்றது. அப்போது பசு அந்தப் புலியைப் பார்த்து, “எனக்கு ஒரு சிறிய குழந்தை இருக்கிறது. அதை நான் வீட்டிலேயே விட்டுவிட்டு வந்துவிட்டேன். நான் போய்ப் பட்டினியாக இருக்கும் அதற்கு உணவு கொடுத்துவிட்டு, வாழ்க்கைக்கான புத்திமதிகளையும் சொல்லிவிட்டு வருகிறேன். அதற்காக அவகாசம் தாருங்கள். கூடிய சீக்கிரம் திரும்பி வந்து விடுவேன்” என்று சொல்கிறது. அதைக் கேட்ட புலி நகைத்துவிட்டு, “உன்னை விட்டால் நீ திரும்பி வரமாட்டாய். நீ என்னை ஏமாற்றித் தப்பிச் செல்லப் பார்க்கிறாய் அல்லவா!” என்று சொல்லிற்று. அதற்கு பசு, “நான் அப்படிச் செய்ய மாட்டேன். அப்படி நான் செய்தால் பெரு நரகத்துக்கல்லவா போய்விடுவேன்” என்று சொல்ல, புலி அதற்கிரங்கி, பசுவைப் போகவிடுகிறது. சென்ற பசு தன் பிள்ளைக்குப் பால் கொடுத்து, பல அறிவுரைகளையும் சொல்லி மீள்கிறது.

பசு மீண்டதைப் கண்ட புலி திகைத்துப் போகிறது. அதற்குப் பசியும் போய்விடுகிறது. இந்தப் பசுவைக் கொல்லக்கூடாது என்ற எண்ணம் அதற்கு உருவாகிறது. அது பசுவைப் பார்த்து, “நீ போய் உன் கன்றை வளர்த்து ஆளாக்கிவிட்டு வா. இன்னொரு நாள் உன்னை வேட்டையிலே பிடிக்கிறேன். இப்போது உன்னை விடுதலை செய்கிறேன்” என்று சொல்ல, பசு, “உனது வேட்டையிலே நான் தோற்றவள். என்னை முறைப்படி வென்ற உனக்கு நான் இரையாவதே முறை. முன்னர் நீ தந்த சந்தர்ப்பம் உனது பெருமையைக் காட்டுகிறது. ஆனால் இனி நீ என்னை உண்டு உன் பசியை ஆற்றுவதே முறை; நான் போகமாட்டேன்” என்று சொன்னது. இவ்வாறு உன்னைத் தின்னமாட்டேன் என்று புலியும், இரையாகுவேன் என்று பசுவும் பிடிவாதம் செய்ய, வானிலே தோன்றிய சிவபெருமான் இருவருக்கும் மோட்சம் கொடுத்தார் என்பது கதை.

இவ்வாறு புலியும் பசுவும் இருந்தனவா என்பதை நாம் அறியோம். ஆகவே அந்தப் பசுவின் “பிள்ளையைப் பெறுவதோடு என் கடமை முடியவில்லை. அதனை ஒரு சீரான வாழ்க்கைக்கு தயார் செய்வது என்னுடைய பொறுப்பு” என்ற கடமை உணர்வே சைவத் தமிழ்க் கலாசாரத்தின் மையம் என்பதே என்னுடைய நம்பிக்கை. இதனையே இரண்டு முனிவர்களின் பிள்ளைகளைப் பற்றி சொல்வதன் மூலம் கந்தபுராணம் சொல்லா நிற்கிறது.

குச்சக முனிவரும் அவர் மகன் மீருகண்டுயரும் ஒரு குடும்பத்தினர். காசிப முனிவரும் அவருடைய பிள்ளைகளான சூரன், சிங்கன், தாரகன் ஆகியோரும் மற்றைய குடும்பத்தினர். குச்சகர் கடகம் என்ற நாட்டிலே அந்தணர்களின் தலைவர். அவருடைய மகன் கௌசிகன். அவர்

பிறவிக்கடலைக் கடப்பதற்காகப் பரம்பொருளான சிவபெருமானை நோக்கித் தவம் செய்தார். அவ்வாறு தவம் செய்யும் நாளிலே அவர் ஒரு நீர்நிலையின் அருகே, அசைவின்றி மூச்சையடக்கி, சிவபெருமானின் ஐந்தெழுத்து மந்திரத்தையும் அவருடைய குணங்களையும் எண்ணித் தவம் செய்தார். இவ்வாறு அவர் இருந்த நேரத்திலே ஒரு பெரிய மரையும் காட்டுப் பசுவும் அவற்றின் உடல் தினவு தீர அவரின் உடல்மீது உராய்ந்துவிட்டுப் போகும். ஆனால் அவர் அதை உணர்வதில்லை. இதனைக் கண்ட திருமால் அவர் முன் தோன்றி அவருக்கு மிருகண்டுயர் என்ற பெயரையும் கொடுத்துப் பழவினைகள் யாவும் நீக்கிப் பேரருள் புரிந்தார். வரம் பெற்ற மிருகண்டுயர் விரைந்து சென்று தந்தையாரை வணங்கி, அவர் கேட்க, நடந்தவற்றைச் சொன்னார். கேட்ட குச்சகர் வாழ்க்கையிலே முன்னோர்களால் வகுக்கப்பட்டதும் அந்தணர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டதுமான ஒன்றுளது. அதனை உனக்குச் சொல்வேன். நினைத்தற்கரிய பிரமச்சரிய ஒழுக்கத்தில் ஒழுகுவதும் இல்வாழ்வில் நிற்றலும் காட்டில் சென்றிருத்தலும் துறவில் வாழ்வதும் என்று சொல்லப்படும் நான்கிலும் முதலாவதான பிரமச்சரிய ஒழுக்கத்தில் இன்றுவரை நின்றாய். நீ அவற்றை அறிவாய்.

உனற்கரும் பிரமந்தன்னில் ஒழுகல்இல் லறத்தில் நிற்றல்
வனத்திடை சேறல் பின்னர் மாதவத் துறவில் வாழ்தல்
எனப்படும் இவற்றினாதி இயற்றினை இன்று காறும்
நினக்கது புகல்வ தென்னோ நீயவை அறிதி யன்றே.
- மார்க்கண்டேய படலம் 13

கடைசியான வானப்பிரஸ்தம், துறவு என்ற இரண்டும் பிற்காலத்துக்குரியவை. எனவே நீ அடுத்ததான இல்வாழ்க்கைக்குச் செல் என்று குச்சர் மகனுக்குச் சொன்னார். கேட்ட மிருகண்டுயர் தந்தையைப் பார்த்து, "முன்பே உண்டாகிய பாசத்தை அழிக்க வேண்டிய யான், பின்னும் ஒரு பாசத்தில் கட்டுப்படுவேனாயின் எவ்வாறு தனக்கு உவமையில்லாத இறைவனின் தாளை அடைவேன்? துன்பம் என்னும் கடலில் ஆழ்ந்து அலைவேனன்றோ?" என்று சொல்லித் திருமணம் வேண்டாம் என்று வாதம் புரிந்தார். வாழ்க்கை நெறியுரைத்து, மறுத்து வாதம் செய்த மகனைச் சம்மதிக்கச் செய்தார் குச்சகர். மிருகண்டுயரின் இல்வாழ்வின் பயனாகவே மார்க்கண்டேயர் தோன்றினார். சிவபெருமானை நோக்கிக் கடுந்தவம் செய்து காலனை வென்றார். எமக்கெல்லாம் கலங்கரை விளக்கமாக இருக்கும் மார்க்கண்டேயர் குச்சகரின் நெறிப்படுத்தலினாலேயே எமக்குக் கிடைத்தார். நிற்க,

காசிபமுனிவர் மாயையுடன் கூடியதால் சூரன், சிங்கன், தாரகன் என்று பிள்ளைகள் பிறக்கின்றனர். மாயையின் தூண்டுதலின் பேரில் சூரன் தலைமையில் அவர்கள் சிவபெருமானை நோக்கிப் பெரு வேள்வி செய்கின்றனர். சிவபெருமான் அவர்கள்முன் தோன்றி அளப்பிலா வரங்களை அளிக்கின்றார். வரம் பெற்ற சூரன் நேரே காசிபரிடம் போகின்றான். தான் பெற்ற வரங்களைப் பற்றியெல்லாம் சொல்லி, தாம் தொடர்ந்து செய்ய வேண்டியதென்ன எனக் கேட்கின்றான். தந்தையான காசிபர் அதைக் கேட்டு, இந்திரனின் வாழ்வுக்கு முடிவு வந்ததோ? தேவர்களுக்கெல்லாம் துன்பம் வந்ததோ? எம் வேத ஒழுக்கம் மாறியதோ? என்று இவ்வாறு எண்ணி, தம்மிடம் வந்த மக்களைப் பார்த்து, "பழைய உங்கள் குலத்தின் குரு சுக்கிராச்சாரியரே ஆவார். ஆதலால் அவரிடத்தில் செல்லுங்கள்" என்று கூறுகிறார்.

உன்னி உள்ளத் துணர்வுறு காசிபன்..
தன்னின் வந்த தனயரை நோக்கியே
முன்னை நுங்கண் முதற்குருப் பார்க்கவன்
அன்ன வன்கண் அடைகுதிர் அன்பினீர். சுக்கிரனுப தேசப் படலம்-13

இவ்வாறு காசிபரால் தட்டிக் கழிக்கப்பட்ட மக்கள் சுக்கிராச்சாரியரின் உபதேசப்படி கொடுமை மிகுந்த வாழ்வு வாழ்ந்து, முருகப்பெருமானால் அழிக்கப்படுகின்றனர். இவ்விரு முனிவர்களின் பிள்ளைகளின் வாழ்வைப் பார்க்கும்பொழுது, வழிநடத்தும் பொறுப்பை ஏற்ற குச்சகரின் மைந்தனான கௌசிகரும் அவருடைய மகன் மாரக்கண்டேயரும் பெரும் சீலர்களாக விளங்கினர். வழிநடத்தும் பொறுப்பை ஏற்காத காசிபரின் பிள்ளைகள் தீமைக்கு உறைவிடமாகி முருகப்பெருமானால் அழிக்கப்படுகின்றனர். இவ்வாறாக பசுவின் கதையின் தத்துவத்தைப் போன்று பெற்ற பிள்ளைகளின் நல்வாழ்விற்குப் பெற்றோரே பொறுப்பு எனக் கந்தபுராணம் காட்டும் சைவத் தமிழ்க் கலாசாரம் சொல்லா நிற்கிறது.

## ஆலயங்களின் தீர்த்தங்களுக்கு நோய்களைத் தீர்க்கும் சக்தி எங்கிருந்து வந்திருக்கும்?

ஆலயம் என்பது வழிபாட்டுக்குரிய இடம் மட்டுமன்று. அங்கு நடைபெறும் பூசைகளினால் பிரபஞ்சத்துக்கு வேண்டிய சக்திகள் அனைத்தும் உண்டாக்கப்படுகிறது. ஒவ்வொரு கிரியையும் மிகவும் ஆற்றலை வெளிப்படுத்தக்கூடியது. தீர்த்தங்களுக்கு மந்திரசக்திகளை ஆகர்ஷிக்கக்கூடிய தன்மை மிகுதியாக இருக்கும். இந்தக் காரணத்தினாலேயே கும்பாபிஷேகம் போன்ற கிரியைகளில், குடத்தில் தண்ணீரை நிரப்பி விசேஷ ஆராதனைகள் செய்து அவற்றை தெய்வத் திருமேனிகளில் சேர்க்கும்போது ஆற்றல் மிகுதியாகிறது.

இதே காரணத்தினாலேயே தினமும் தண்ணீராலும் திரவியங்களினாலும் கடவுளுக்கு விசேட அபிஷேகங்கள் நடைபெறுகின்றன. நாத்திகர்கள் நம்மைப் பார்த்து "கல்லை அலம்புகிறார்கள்" எனக் கேலி செய்கிறார்கள். விலை உயர்ந்த வைரக் கல்லுக்கும் வெறும் கல்லுக்கும் வேறுபாடு இருக்கிறது. தெய்விக சக்தியானது ஆலயத்தில் தெய்வத் திருமேனியாக ஆகிவிடுகிறது. நித்திய ஆராதனைகளால் மிளிரும் தெய்விக சக்தியானது ஆலயம் முழுவதும் நிரம்பி மக்களுக்குப் பயன்படுகிறது,

எனவே ஆலயங்களில் அமைந்துள்ள தீர்த்தங்கள் மிக அபூர்வமான சக்திகள் கொண்டவையாக விளங்குகின்றன. எனினும் தற்காலத்தில் பல ஆலயங்களிலுள்ள தீர்த்தக் குளங்கள் சரியான பராமரிப்பு அற்றவையாகவும் தூய்மையற்றவையாகவும் காணப்படுகின்றன. உழவாரப் பணி செய்தும் திருக்கோயில் குளங்களைச் செப்பனிட்டும் பல உயர்ந்த உள்ளங்கள் சிறந்த முறையில் பராமரித்தார்களேயானால் மாதம் மும்மாரி பெய்யும் என்பதில் எள்ளவும் சந்தேகமில்லை.

## மகாலட்சுமியின் அம்சமான தங்கத்தில், பெண்கள் கால்களில் கொலுசு அணியலாமா?

தங்கம் தூய்மையின் சின்னம். நெருப்புக்குச் சமமானதாகக் கருதப்படுகின்றது. ஆகவே, தங்கத்தினாலான எந்த ஆபரணங்களையும் இடுப்பிற்கு கீழ் அணியக்கூடாது. சாஸ்திரங்கள் ஒரு விஷயத்தை பல கோணங்களில் ஆராய்ந்து நமக்குக் கட்டளையிடுகின்றன. நமக்கு அவ்வளவு நோக்குடைய பார்வையில்லை என்பது உண்மை. ஆகவே, தங்கத்தை அணிவதைப் பெண்கள் தவிர்க்க வேண்டும்.

--**அறிவோம் ஆன்மிகம்- என்ற நூலிலிருந்து.**
**தொகுத்தவர்: வை சிவனருட்செல்வர்**

# தட்சிணாமூர்த்தி - குருபகவான்!!





தட்சிணாமூர்த்தி என்பவர் வேறு; குரு பகவான் என்பவர் வேறு. இருவரும் ஒருவரல்லர். ஆனால் நிறையப் பேர் தட்சிணாமூர்த்தியும் குருபகவானும் ஒருவர்தான் என்று நினைத்துக்கொண்டு வழிபாடு செய்கிறார்கள். தட்சிணாமூர்த்தி ஞானகுரு; குருபகவான் தேவ குரு.

தட்சிணாமூர்த்திக்கும் குருபகவானுக்கும் நிறைய வேறுபாடுகள் உள்ளன.
தட்சிணாமூர்த்தி என்பவர் சிவ வடிவம்; குருபகவான் என்பவர் கிரக வடிவம். இவர் சிவன்; அவர் பிரகஸ்பதி. தட்சிணாமூர்த்தி என்பவர் முதலாளி; குரு அதிகாரி.

தட்சிணாமூர்த்தி கல்லாலின் கீழ் அமர்ந்து நான்மறைகளோடு ஆறு அங்கங்களையும் சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் என்ற நான்கு பிரம்மரஷிகளுக்கும் போதிப்பவர்.

குருபகவான் நவகோள்களில் குரு என்ற வியாழன், வெள்ளை யானை மேல் பவனி வரும் தேவர்களின் குரு. உயிர்களுக்கு, அவை முன் ஜென்மங்களில் செய்த நல்வினை தீவினைகளுக்கான பலாபலன்களை இடமறிந்து, காலமறிந்து கொண்டு சேர்ப்பவர்.

தட்சிணாமூர்த்தி 64 சிவவடிவங்களில் ஒருவர்; குரு ஒன்பது கோள் தேவதைகளில் 5ஆம் இடத்தில் அங்கம் வகிப்பவர். சிவன் தோன்றுதல் மறைதல் என்ற தன்மைகள் இல்லாதவர்; குருவோ உதயம், அஸ்தமனம் என்ற தன்மைகள் உடையவர்.

இத்தனை தத்துவ வேற்றுமைகளைக் கொண்டுள்ள இந்த இரு தேவர்களையும் குரு என்ற ஒற்றைச்சொல்லை மட்டும் வைத்துக்கொண்டு அவர்தான் இவர், இவர்தான் அவர் எனப் பரிகாரம் செய்வது முறையன்று.

சில ஆலயங்களில் தட்சிணாமூர்த்தியை குருபகவான் என்றே மாற்றிவிட்டார்கள். அவருக்கே அனைத்துப் பரிகார பூஜைகளையும் செய்கிறார்கள். குருவுக்கு அணிவிக்கவேண்டிய மஞ்சள் துணியைத் தட்சிணாமூர்த்திக்கு அணிவிக்கிறார்கள். கடலை சாதம் போன்ற குருகிரக நைவேத்திய பொருள்களை தட்சிணாமூர்த்திக்கு நைவேத்தியம் செய்கிறார்கள்.

குருப்பெயர்ச்சியன்று தட்சிணாமூர்த்தி சந்நிதியில் ஹோமங்கள் அபிஷேக ஆராதனைகள், சாந்தி பரிகாரங்கள் செய்கிறார்கள். இவையெல்லாம் தவறு என்று ஆன்மிகவாதிகள் வாதிடுகிறார்கள். சிலர் குருவுக்கு அதிதேவதை தட்சிணாமூர்த்தி என்று சொல்கிறார்கள். அதுவும் தவறு. குருவுக்கு அதிதேவதை இந்திரன். பிரத்யதி தேவதையோ பிரம்மதேவன். இதற்கான ஆதாரங்கள் பல தொன்னூல்களில் உள்ளன. எனவே தட்சிணாமூர்த்தியும் குரு பகவானும் ஒன்றே என நம்மை நாமே குழப்பிக்கொள்ளக்கூடாது.

# திருவானைக்கா

## பயணக் கட்டுரை

**சாவகச்சேரியூர் Dr க கதிர்காமநாதன்**

பிராணிகளும் இறைவன் மீது இறை அன்பைக் காட்டி, முத்தியடைய முடியும் என்ற உண்மையை உணர்த்தும் தலம் திருவானைக்கா. திரு + ஆனைக்கா = திருவானைக்கா. யானை (ஆனை) வழிபட்டு மோட்சம் அடைந்தது; கஜேந்திர மோட்சம்!

ஆனைக்கா தேவார மூவர், அருணகிரிநாதர், கச்சியப்ப முனிவர், காளமேகப்புலவர், மகாவித்வான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை ஆகியோரால் பாடல் பெற்ற தலம். சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான முத்துஸ்வாமி தீட்சிதர் அம்பாள் அகிலாண்டேஸ்வரி பெயரில் "அகிலாண்டேஸ்வரி" என்றொரு கீர்த்தனையை "துஜாவந்தி" என்ற அபூர்வ இராகத்தில் பாடியுள்ளார். தேவாரப்பாடல் பெற்ற தலங்களில் சோழநாடு காவிரி வடகரைத் தலங்களில் அமைந்த 60 ஆவது சிவத்தலம். பஞ்ச பூதத்தலங்களில் இது நீர்த் (அப்பு) தலமாக விளங்குகிறது. நீரின் பெருமை : "நீரின் றமையாது உலகெனின்..." - திருக்குறள்.
நீர் இல்லாவிடின் சகல சீவராசிகள், உயிரினங்கள் யாவும் வாழாது.

**இறைவன்:** நீர்த்திரள் நாதர், அப்புலிங்கேஸ்வரர், ஜம்புகேஸ்வரர் ஆனைக்கா அண்ணல்.
**இறைவி:** அகிலாண்டேஸ்வரி
**தலமரம்:** வெண்ணாவல் மரம் (ஜம்பு)
**தீர்த்தம்:** காவேரி

நீரைத் திரட்டி அம்பாள் லிங்க ரூபம் அமைத்ததால் நீர்த்திரள் நாதர், ஜம்பு மரத்தின் கீழ் இருந்ததால் ஜம்புகேஸ்வரர் என்ற பெயர்கள் வந்தன.

**வரலாறு:**
இரு சிவகணங்கள், சாபத்தால் யானையாகவும், சிலந்தியாகவும் பிறக்க நேர்ந்தது. வெண் நாவல் மரத்தடியில் சிவன் லிங்கமாக, கூரையில்லாமல் இருக்க, வெய்யில், மழை, இலை சருகுகுகள், தூசு போன்றவைகளால் பாதிக்கப் படுவதைக் கண்டு, தடுக்க சிலந்தி வலை பின்னி வணங்கியது. யானை வலையைப் பார்த்து அருவருத்து அதைப் பிடுங்கி, காவிரி நீரால் அபிடேகம் செய்து பிரார்த்தித்தது. தினமும் இவ்வாறே நடைபெற்றது. சீற்றமடைந்த சிலந்தி காரணத்தைக் கண்டுபிடித்து, யானை வரும்போது அதன் தும்பிக்கையின் உட்சென்று கடிக்க. வலியால் யானை தும்பிக்கையை அடிக்க இறுதியில் இரண்டுமே இறந்தன. யானை முத்தியடைந்தது. சிலந்தி யானையை கொன்றதால் மறுபிறப்பெடுத்து கோச்செங்கட்சோழன் என்ற சோழ அரசனாகப் பிறந்தது.

**ஆலயம்:**
18 ஏக்கர் நிலப்பரப்பில் உயர்ந்த நான்கு திசை நோக்கும் கோபுரங்களோடும், நீண்ட பலமுடைய உயர்ந்த மதில்களோடும், ஐந்து பிரகாரங்களையும் கொண்டு விளங்குகின்றது.

துன்பமும் இன்றித் துயரின்றி என்று நீர்
இன்பம் வேண்டில் இராப்பகல் ஏத்துமின்

என்பொன் ஈசன் இறைவன் என்று உள்குவார்(க்கு)
அன்பன் ஆயிடும் ஆனைக்கா அண்ணலே

- அப்பர்

இதன் பொருள், துன்பமும் துயருமின்றி, என்றும் குன்றாத இன்பத்தை விரும்பினால் இரவு, பகல் எப்போதும் ஆனைக்காவல் அண்ணலை வழிபடுங்கள்.

**ஜம்புகேஸ்வரர்:**



ஐந்தாவது பிரகாரத்தில் மேற்கே பார்த்தபடி அருள்பாலிக்கின்றார். கொடிமரத்தொடு, சுயம்புலிங்கமாக அழகில் உருக்குலையாத கச்சிதமான சிற்பங்களோடு, வாசல் இல்லாத கருவறையில் காட்சியளிக்கின்றார். சந்நிதி சிறிது சிறிதாகக் கீழே இறங்கி, தரை மட்டத்திற்கு கீழே அமைத்துள்ளது. ஒன்பது துவாரம் ஊடாகத்தான் தரிசிக்க முடியும். இதை திருச்சாலகம் எனக் குறிப்பிடுவர். இது, தரிசிக்கும் போது ஒவ்வொருவரும் தமது ஒன்பது வாசல்களையும் அடக்கி வழிபட வேண்டும் என்பதை உணர்த்துகின்றது. மேலும் ஒன்பது தீர்த்தங்களில் நீராடிய புண்ணியம் உண்டு எனவும் கருதுவர். நீர்க்கசிவு கருவறையில் எப்போதும் எக்காலத்திலும் காணலாம். அப்புலிங்கம் அல்லவா? நீரின் குளிர்ச்சியோடு, மூலஸ்தானத்தில் இருக்கும் மூலவரை சிறு விளக்கு ஒளியோடு, அமைதியான சூழலில் மன அடக்கத்துடன் பிரார்த்திக்கும்போது உளம் குளிர்ந்து அளவில்லா அநுபவம் கிட்டும். ஜம்புகேஸ்வரரைப் பதினோரு முறை வலம் வந்தால் பாவங்கள், கிரகதோஷம், நோய் நொடிகள், வறுமை நீக்கம் நிகழும் என்பது ஐதிகம்.

நீர்த்திரள்நாதர் சந்நிதியின் பின்புறத்தில் சரஸ்வதி தேவி நின்ற நிலையில் வீணையில்லாமல் காட்சியளிப்பதையும், பரிவார மூர்த்திகளாக 63 நாயன்மார்களும், 108 சிவலிங்கங்களும், நவக்கிரகங்களும், நர்த்தன விநாயகர், முருகன், சண்டிகேஸ்வரர் மூர்த்தங்களையும் தரிசிக்கலாம்.

**திருநீற்றான் மதில்:**

நான்காவது பிரகாரத்தில் உள்ள 8000 அடி நீளமும், 32 அடி உயரமும், 2 அடி அகலமும் கொண்ட மதிலுக்கு திருநீற்றான் மதில் என்ற பெயர். இறைவன் சித்தராக தோன்றி, திருநீற்றையே கூலியாகக் கொடுத்து இம்மதிலைக் கட்டுவித்தார். அவரவர் பணிக்கேற்ப, திருநீறு பொன்னாக மாறியதாக வரலாறு. ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி நாளில், மாலை நேரத்தில், திருமுறைகள் பாராயணம் செய்து மதிலை வலம் வருவர். இதனை திருநீற்றான் மதில் வலம் எனக் குறித்து வெகு சிறப்பாக நடத்துவர்.

**அகிலாண்டேஸ்வரி ஆலயம்:**

அகிலம் = உலகம், ஆண்ட = காக்கின்ற, ஈஸ்வரி = நாயகி. அம்பாளின் ஆலயம் தனிக் கோயிலாக நான்காவது பிரகாரத்தில் கிழக்குவாசல் கோபுரத்தோடும், கிழக்கே பார்த்து இரு சுற்று பிரகாரங்களோடும் இருக்கிறது. அம்மனின் 51 சக்திபீடங்களில் இது ஞானசக்தி பீடமாக விளங்குகின்றது.

அம்பாள் நின்ற நிலையில் முன்கைகள் அபய, வரதமாகவும், பின்கைகள் தாமரை மலர் கொண்டு காலையில் இலட்சுமியாகவும், உச்சிக் காலத்தில் பார்வதியாகவும், மாலையில் சரஸ்வதியாகவும் காட்சியளிக்கின்றார். முன்பு மிக உக்கிரமாக திகழ்ந்தவள். இதனால் பக்தர்கள் பயப்பட்டனர்.

இதைத் தணிவிக்க ஆதி சங்கரர், காதணிகளைப் பெரிதாக, பக்தரின் பார்வைக்கு பளிச்சென்று தெரியும் வண்ணம் தடாகங்களாக அமைத்தார். மேலும், அம்பாள் முன் விநாயகரையும் பின் முருகனையும் பிரதிட்டை செய்தார்.

மடைப்பள்ளி வரதர் என்பவர் களைப்பால் சோர்ந்து உறங்கிவிட்டார். பெரிய கோயில் என்றதனால் ஒருவரும் இவரைக் காண்பதில்லை. ஒரு நாள் இரவு அம்பாள் தாம்பூலம் போட்டபடி “கோயிலில் உமிழ்வது தவறு, உனது வாயைத் திற” என்று கூறி உமிழ்ந்தாள். அகிலாண்டேஸ்வரியின் அருள் பெற்றுக் கவிமழை பெய்யத் தொடங்கக் காளமேகப் புலவராகி “ஆனைக்கா உலா” என்பதை மட்டுமன்றி மேலும் பல பாடல்களைப் பாடியுள்ளார். தற்போதும் மக்கள் கல்வி, கலைஞானம் பெற அம்பாளுக்குத் தாம்பூலம் படைத்து வழிபடுவர்.

அம்பாளும் பிள்ளையாரும் “ஓம்” என்ற பிரணவ மந்திர அமைப்பில் இருப்பது குறிப்பிடத்தக்கது. சிவன் மேற்கேயும் பார்வதி பணிந்து கிழக்கேயும் நோக்குவது குரு சிஷ்ய பாவத்தில் சிவஞானபோதம் போதித்தது போன்ற தோற்றத்தைக் கொடுக்கிறது. இதனால், திருவானைக்கா உபதேசத் தலமாகக் திகழ்கிறது. இவற்றால் இங்கு திருமணங்கள் நடப்பதில்லை. அகிலாண்டேஸ்வரிக்குப் பங்குனி மாதம் பிரம்மோற்சவம், ஆடிப்பூரம் போன்ற விழாக்கள் நடைபெறும். முதலை வாகனத்திலும் அம்பாள் பவனி வருவதுண்டு.

**கோமாதாபூசை:**
கோ = பசு. ஒரு தாய் பிள்ளைக்குப் பால் கொடுப்பது, பிள்ளை தனக்கு ஏதாவது திருப்பி தரவேண்டும் என்பதற்காக அல்ல. அதே போன்று பசு எமக்கு பால் கொடுக்கின்றது. இதனால் பசுவைத் தாயாக, மாதாவாக, புவனேஸ்வரியாகப் போற்றுகின்றோம். இதன் உடலில் இறைவன், தேவர்கள், ரிஷிகள், முனிவர்கள் உறைந்து உளர். இதனால் இது சர்வதேவதாய் ஆகும். பசுவின் தாய் காமதேனு. மேலும் பசு எமது பண்பாட்டின் சின்னம். சாது என்ற சொல்லுக்கு இலக்கணம். அம்பிகையே இறைவனை லிங்கமாக்கி பூசித்த தலம் திருவானைக்கா ஆகும். இதனால் இன்றும் உச்சிக்காலத்தில் அம்பாள் அர்ச்சகர் அம்பிகை போல் உடை அணிந்து கோமாதா பூசை செய்கிறார். பரம்பரையாகிய இவர்களைப் பண்டிதர்கள் என்பர்.

“கோபூசை கோடி நன்மை” என்ற வாக்கு உண்டு. கோமாதா பூசை காணும் வாய்ப்பு எமக்குத் திருவருளால் கிடைத்தது. மதிய நேரம் கோயில் வாசலில் ஒரே கூட்டம். யானை ஒன்று நின்று யாவரையும் ஆசீர்வதித்தது. குழந்தைகளையும் ஆசீர்வதித்தது. சனத்திரள் நடுவில் வெள்ளை நிறப் பசுவொன்று கம்பீரமாக நன்கு அலங்கரிக்கப்பட்டு புனிதமாக காப்பாளரோடு நின்றது. சனக்கும்பல் கூடிக்கொண்டே சென்றது. மேளம் ஒலிக்க, யாவரும் காத்திருக்க, எதிர்பார்த்த சிவாசாரியார் வந்தார். சிகப்பு நிறச் சேலை அணிந்து, தலையில் கிரீடம் வைத்து, உருத்திராட்ச மாலையோடு கோமாதாவை அடைந்தார். வால் பக்கத்தில்தான் இலட்சுமி இருப்பதாக ஐதிகம். பின்புறம் பூசை செய்தபின், முன் பக்கம் சென்று முன்போல் தூப தீபம் காட்டி அதன் கழுத்தில் மாலை அணிவித்தார். இதன் பின்னர் பக்கங்கள் சென்று பூசை செய்தார். சிறு நிமிடங்கள் தான் என்றாலும் கண் கொள்ளாக்காட்சி! மக்கள் பார்வதியாகப் பாவித்து இவரை வணங்கினர். சர்வதேவதாயை மக்கள் சுற்றி வலம் வந்தனர். இதனால் இறைவனோடு, பல தேவர்கள், ரிஷிகள், முனிவர்கள், கிரகங்கள் யாவரையும் வழிபட்ட பலன் உண்டு. பிரார்த்தனை எதுவென்றாலும் காரிய சித்தியாகும். வாலைத்தொட்டுக் கும்பிட்டாலே கவலைகள் தீர்ந்து இலட்சுமி கடாட்சம் கிட்டும்.



**அகிலா:**

பிறந்தால், திருவானைக்கா கோயில் அகிலா (யானை) போல் பிறக்க வேண்டும் என்பது மக்களின் ஆசை. அகிலா சகல ஆலய உற்சவங்கள் வைபவங்களிலும் முன்னின்று பங்கு பற்றும். பசுவைப்போல் சாதுவான அகிலாவுக்கு ஒரு நீச்சல் குளமே கோயிலுக்கு அருகில் நாச்சியா தோப்பு பகுதியில் கட்டப்பட்டுள்ளது. 6 அடி ஆழம் 21 அடி நீளம் கொண்ட நீந்தும் நீரோடை. அகிலா குளிக்கும்போது ஒருவரோ இருவர் இருந்து உடலைத் தேய்ப்பர். அவ்வமயம் தும்பிக்கையால் சிறுவர்களுக்கும், மக்களுக்கும் அகிலா ஆசீர்வதிக்கும். அகிலாவிற்கு SHOWER பூப்போல் கொட்டும் நீராடலும் உண்டு.

வானைக்காவில் வெண்மதி மல்கு புல்கு வார்சடை
தேனைக் காவில் இன்மொழி தேவி பாகம் ஆயினான்
ஆனைக்காவில் அண்ணலை அபயமாக வாழ்பவர்
ஏனைக்காவல் வேண்டுவார்க்கு ஏதும் ஏதம் இல்லையே - சம்பந்தர்

கோச்செங்கட்சோழன் 1800 வருடங்களுக்கு முன்னர் நிர்மாணித்த திருவானைக்கா ஆலயத்தை திருச்சி சத்திரம் பேருந்து நிலையத்திலிருந்து சமயபுரம் செல்லும் வழியில் திருவரங்கம் அருகில் 3 கி.மீ தொலைவில் அடையலாம். திருவரங்கம் புகையிரத நிலையத்திலிருந்து நகரம் பேருந்து மூலம் எளிதாகச் செல்லலாம். திருச்சிக்கு சிறந்த விமான சேவை உண்டு.

SIR. C.V. RAMAN 07-11-1888 - 21-11-1970 திருவானைக்கா தந்த பொக்கிஷம். NOBEL PRIZE FOR PHYSICS 1930, விஞ்ஞானத் துறை சார்ந்த பௌதிகத்திற்காக முதன் முதலாக இத்துறையில் நோபல் பரிசு ஆசியாவிலே 1930 ஆம் ஆண்டு பெற்று பெரும் புகழ் ஈட்டிய அறிவாளி ஆவர். ஒளி ஆய்வுத் துறையில் “RAMAN EFFECT” இராமன் விளைவு என்ற கண்டுபிடிப்புக்கே இப்பரிசு கிடைத்தது. மேலும் விருதுகள் பெற்று ஆசியாவில் அறிவியல் ஆராய்ச்சிக்கு வித்திட்டு எம்மோடு வாழ்ந்த பெருந்தகை.

“வாராய் வாராய்” என எம்மை இசையின் உச்சிக்கே அழைத்துச் சென்ற பாடகர் திருச்சி லோகநாதன் அவர்களை யார்தான் மறப்பர்?

சிவனுக்குத் தினமும் ஆறுகால வழிபாடுகள் நடைபெறவேண்டும் என்று விதியுண்டு. இந்த ஆறுகால வழிபாடுகளில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு தலத்தில் விசேடமானவை. அந்தந்தத் தலங்களில் அந்தந்தக் கால வழிபாடுகளைத் தரிசிப்பது சிறப்பு.
அவையாவன:

| | |
|---|---|
| அதிகாலை - | திருக்குற்றாலம், |
| காலை - | இராமேஸ்வரம், |
| நண்பகல் - | திருவானைக்கா, |
| மாலை - | திருவாரூர், |
| இரவு - | மதுரை |
| அர்த்தசாமம் - | சிதம்பரம் |

# யோகசுவாமிகளின் போதனைகள் மகாவாக்கியங்கள்

திருமதி அமிர்தா தியாகலிங்கம்

நம் உள்ளத்தே தான் இறைவன் இருப்பதால் உள்ளத்தை வளர்க்க வேண்டும். உயர்ந்த உள்ளத்தை உருவாக்க வேண்டுமானால் அதைத்தாங்கும் உடம்பானது வலிமை உடையதாக இருக்க வேண்டும். நோய் வராது காப்பது நம் கடமையாகும்.

உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திறம்பட மெய்ஞ்ஞானம் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்னே் உயிர் வளர்த்தேனே

என்கிறார் திருமூலர்.

“சும்மா இரு”என்பது சிறந்த ஒரு போதனை. அருணகிரிநாதர் சொன்ன மெய்யான சொல்லுமாகும். “சும்மா இரு” - யோகசுவாமிகள் தன்னை நாடிய பக்தர்களுக்கு உபதேசித்த ஞான மந்திரமும் இதுவேயாகும். “சும்மா இரு” என்பது செயல் அடங்கி, பேச்சு அடங்கி, மனம் அடங்கி இருப்ப தேயாகும். இறைவனுடைய அருளைப் பெற விரும்புவோர் பல விதமான முயற்சிகளைச் செய்கிறார்கள். அந்த அருள்பெற்ற நிலையில் சொல் அடங்கி, செயல் அடங்கி, மனம் அடங்கி ஞான நிலையில் ஒன்றுபட்டு சும்மா இருக்கிறார்கள். இதற்கு முன் பலதையும் பேசிய இவர்கள் அநுபவத்திற்குள் ஆளாகும் போது எல்லாம் அடங்கி விடுகிறது. யோகசுவாமிகள் இந்தச் சும்மா இருக்கும் சுகத்தை நன்றாக அநுபவித்தவர்கள். இதனால்தான், தான் பெற்ற இன்பம் தன் அடியார்களும் பெறுவதற்காக இந்த “சும்மா இரு” அருள் வார்த்தையை உபதேசித்தார். எப்போது மௌனம் தொடங்குகின்றதோ அதைத் தொடர்ந்து ஞானமும் நிறைவு பெறுகிறது. தாங்கள் சும்மா இருந்து அநுபவிக்கும் சுகத்தை மக்கள் கெடுத்து விடுவார்கள் என்பதற்காகவே பயித்தியவேடம் பூண்டு ஒதுங்குகிறார்கள்.

முயற்சி திருவினையாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும். குறள் *316*

“சாதனை செய்த பேர்கள் சாகார் உலகில்” என்று நற்சிந்தனை சொல்கிறது. தியாகங்கள் செய்வது சாதனைக்கு வழி காட்டும். ஆன்மாவைத் தூய்மை ஆக்குவதற்கு அழுக்காறு, ஆசை, கோபம் என்பவற்றைத் தியாகம் செய்ய வேண்டும்.

எல்லாம் சிவமயமே என்பதால் “ஆன்மாதான் இறைவன், இறைவன்தான் ஆன்மா”. திருமூலரும் “கடவுளும் நானும் ஒன்றே!” என்ற ஞானத்தைப் போதித்தார். இறைவனே ஆன்மா என்ற தத்துவத்தை வேதம் சொல்கிறது. இதைத்தான் சுவாமிகள் “சும்மா இரு” என்று அருளிச் செய்தார். பக்குவம் உடைய ஆன்மாக்களுக்கு சிவபெருமான் தானே குருவாக வந்து அருள்புரிவார் என்பது சைவசமயக் கொள்கை. சுவாமிகளின் போதனைகளில் கடவுளைத் தேடி எல்லா இடமும் சுற்றி அலைந்தும் காணாமல் இறுதியில் வீட்டுக்குத் திரும்ப வந்தபின்புதான் “கடவுள் தன்னுள்ளே இருப்பதைக்” கண்டாராம்.

**மகாவாக்கியங்கள்:**

செல்லப்பாசுவாமிகள் யோகசுவாமிகளுக்கு நான்கு மகா வாக்கியங்களை உபதேசித்தார். எல்லா சாஸ்திரங்களினதும் சாரத்தை அவை உள்ளடக்கி உள்ளதால் மகாவாக்கியங்கள் எனக் குறிக்கப்பட்டன.

1. எப்பவோ முடிந்த காரியம்
2. நாம் அறியோம்
3. ஒரு பொல்லாப்பும் இல்லை
4. முழுதும் உண்மை

இவற்றைக் கற்றோ அல்லது பாராயணம் செய்தோ பூரண விளக்கம் பெறுதல் கடினம். இந்த மகாவாக்கியங்களைச் சரியாகப் பயின்று சாதனா நுட்பங்களை விளங்கினால், சாதனை செய்ய முயற்சிப்பது இலகுவாக இருக்கும். இவை வேதாகமங்கள் போல் உயர்வான தெய்வீகத்தன்மை உடையன. இவற்றுள் பொதிந்துள்ள மறை பொருளை இலகுவாக விளங்க முடியாது.

சாதனா முறைகளில் சிறந்தது தியானம் ஆகும். இதன் மூலமாகவே மகாவாக்கியங்களின் மெய்ப்பொருளையும், அவை மறைமுகமாகக் காட்டும் சாதனா நுட்பங்களையும் சுயமாக உணர்ந்து தெளிய முடியும். தியானம் செய்வதற்கு நடுவு நிலைமை முக்கியமாகும்.

நடுவுநின் றார்க்கன்றி ஞானமும் இல்லை
நடுவுநின் றார்க்கு நரகமும் இல்லை
நடுவுநின் றார்நல்ல தேவரு மாவர்
நடுவுநின் றார்வழி நானும் நின்றேனே

என்று திருமூலரும் கூறினார். மகாவாக்கியத்திற்குள் பொதிந்து உள்ள மறைபொருளைக் கிரகிப்பதற்கு விவேகப்படைப்பு சக்தி வேண்டும். இச்சக்தியை அருள்பவர் சிவகுருவே. ஆகையால் அவன் தாள் வணங்கி அவன் அருளாலே உணர்ந்து கொள்வோம்.

**1. எப்பவோ முடிந்த காரியம்:**

ஆன்மிக விடுதலையை நாடும் அடியார்களின் மனதில் சில பயங்கள் எழுகின்றன. அதாவது தங்களுக்கு திருவருள் இல்லை என்றும், தங்களின் கர்மவினைகளும் நாளும் கோளும் தங்களுக்குத் தடையாக இருக்கிறதாகவும் எண்ணுகிறார்கள். இப்படியாக அல்லல் படும் அடியார்களுக்கு நம்பிக்கையும், ஆர்வமும் ஏற்படுவதற்காகவே "எப்பவோ முடிந்த காரியம்" என்னும் அருள் உபதேசம் செய்துள்ளார். உயிர்கள் படைக்கப்படும் போதே அருட்சக்தியானது இறைவனால் இயற்கையாக அருளப்படுகிறது. இதனால் மக்களும் திருவருளுடனே பிறக்கிறார்கள். இத் திருவருள் ஆனது பந்த பாசத்தினால் மறைக்கப்பட்டு உள்ளது. இந்த பந்தபாசத்தை நான்கு சாதனைகள் மூலம் விலகச் செய்யலாம். அதாவது கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடுதல். மாணிக்கவாசகரும் திருவாசகத்தில் "இறைவனே நீ என் உடலிடங் கொண்டாய் இனி உன்னை என்னிரக்கேனே" என்றார். அதாவது இறைவன் எமது உடலிற் குடி கொண்டு உயிராகவும் அறிவாகவும் உள்ளான். ஆகையால் இது எப்பவோ முடிந்த காரியம். அதாவது ஏற்கனவே திருவருள் அமைந்துள்ளதால் புறப்பூசைகள் தேவை இல்லை. அது எப்படி எனின் கையில் வெண்ணையை வைத்துக் கொண்டு நெய்க்கு அலைவது போல் இருக்கும்.

### 2. நாம் அறியோம்:

நான் யார்? என்பதை நடுநிலையில் நின்று நன்றாக தெரிந்து கொள்ளும்படி சுவாமிகள் உபதேசித்தார். இது திருமூலரின் திருமந்திரத்திற்கு ஒப்பாக உள்ளது.

தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்
தன்னை அறியும் அறிவை அறிந்தபின்
தன்னையே அற்சிக்கத் தானிருந் தானே

தன்னை அறியும் அறிவு, அறிவுக்குத் தெளிவறிவாக உள்ள அருள் உணர்வாகும். சுட்டறிவினால் ஆன்மாவை அறிய இயலாது. மெய்யுணர்தல் நிலையில்தான் ஆன்மாவைப் பற்றிய பூரண ஞானம் பெறலாம். ஊஞ்சல் ஆடும் மனத்தால் ஆன்மாவை நாம் அறியோம். மனோலயம், அதாவது மனவொடுக்கம் அடைவதற்குரிய சாதனை செய்து திருவருள் பெறவேண்டும். இத் திருவருள் எம்மைத்தாங்கி எமக்கு ஆன்மஞானம் கொடுக்கும். இப்படியாகத்தான் செல்லப்பாசுவாமிகள் யோகசுவாமிகளுக்கு கற்பித்து அவரை ஆன்மஞானம் பெற நெறிப்படுத்தியதாக அறிகிறோம்.

### 3. ஒரு பொல்லாப்பும் இல்லை:

மூன்றாவது மகாவாக்கியத்தை நல்லூர் கந்தன் முன்னிலையில் செல்லப்பாசுவாமிகளிடம் உபதேசம் பெற்று, பின் கதிர்காமக்கந்தன் முன்னிலையில் அதற்கு மெய்ஞ்ஞான விளக்கம் அடைந்தார். நடுநிலையில் நின்று முருகன் அருளோடுதான் "ஒரு பொல்லாப்பும் இல்லை" என்னும் மகாவாக்கியத்தை விளங்க முடியும். மனதில் ஒரு மாற்றம் ஏற்பட்டால் தான் இதைப் பூரணமாக விளங்க முடியும் என்றால் எத்தகைய மாற்றம் பெறுதல் வேண்டும்.

மனதில் சிந்தனைகளும், உணர்ச்சிகளும் எழும்போது இயல்பாகவே நல்லனவும், பொல்லாதனவும் சேர்ந்து இருப்பதைக் கவனிக்க முடியும். பொல்லாப்புடைய மனதிற்கு நல்லதை செய் என எப்படித் தூண்ட முடியும்? மனமாற்றம் வேண்டும். இதை தெளிவறிவு மூலமே பெற முடியும். மக்களுள் முழுவதும் பொல்லாப்போ அல்லது முழுவதும் நன்மையையே உடையவர்களாகக் காண்பது அரிது. ஆனால் பொல்லாப்பும் நன்மையும் கூடியோ குறைந்தோ இருக்கலாம். யோகசுவாமிகள் போன்ற ஞானிகளும், சித்தர்களும் ஒரு பொல்லாப்பும் இல்லாமல் முழுதும் நன்மையாக இருந்ததை அறிந்து இருக்கிறோம்.

இது எப்படி அவர்களுக்கு முடிந்தது. இதற்குக் காரணம் மனதால் ஏற்படும் பொல்லாப்புக்கு எதிரான நன்மை அல்ல. சைவசித்தாந்தம் சிவனை நன்மையின் சொரூபமாக விளக்குகின்றது. "சிந்தையை அடக்கியே சும்மா இருத்தல் அரிது" என்று தாயுமான சுவாமிகளும் சொல்கிறார்கள். ஆனால் யோகசுவாமிகள் நிசமாகவே சும்மா இருந்தும் வாழ்ந்தும் வந்ததாக அறிகிறோம்.
யோகசுவாமிகள் மாணிக்கவாசகப்பெருமான் காட்டிய வழியில்,

நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்
தேனாயின் அமுதமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள் செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே

இதன்படி சிவதியானம் செய்தார். சிவத்தியானம் மூலம் திருவருள் பெற்று மனம் மாற்றம் அடைந்து ஒரு பொல்லாப்பும் இல்லாது தெய்விக வாழ்க்கை வாழ அது வழிகாட்டுகிறது.

"......தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோர் அன்ன......"

4. **முழுவதும் உண்மை:**

நான்காவது மகாவாக்கியம் - கடைசி வாக்கியம். நாம் பலவற்றை பார்த்தும், கேட்டும் படிக்கிறோம். இதே சமயத்தில் நாம் அறிபவை எல்லாம் உண்மைதானா என்ற கேள்வியும் எழுகின்றது. ஆனால் யோகசுவாமிகள் முழுவதும் உண்மை என்பதன் மெய்ப்பொருளை அறிந்து தான் எமக்கு உபதேசித்துள்ளார். எம்மால் எப்படி உண்மைப் புலப்பாட்டை அறியமுடியும் என்னும் கேள்விக்கு, நாமும் யோகசுவாமிகளை வணங்கிப் போற்றி புறப்பூஜைகள் செய்வதா? அல்லது அவரை பின்பற்றுவதா? அல்லது அவரைப்போல் நாமும் மனமாற்றம் பெற்று, மனதில் திருவருளை உண்டாக்கி இதன் மூலம் உண்மைப் புலப்பாட்டை நாமே நேரடியாக அறிவதா? நாம் சாதனைகள் செய்வதற்கு சுவாமிகளின் அன்புநெறி வழிகாட்டியாக உள்ளது. இதை பின்பற்றி சாதனைகள் செய்து திருவருளைப் பெறமுடியும்.



நாயன்மார்கள், சந்தானகுரவர்கள், மகரிஷிகள் எல்லோரும் தனித்தனியே சாதனம் செய்துதான் சத்திய சொரூப தரிசனம் கண்டு முழுவதும் உண்மை விளக்கம் பெற்றனர். சத்திய சொரூபமாகிய சிவனே சச்சிதானந்தன். அவன் "சத்" எனப்படும் உண்மையையும் "சித்" எனப்படும் பேரறிவையும் ஆனந்தம் என்னும் பேரின்பத்தையும் முழுமையாகக் கொண்டவனாகும். இது முழுவதும் உண்மை. எனவே நாம் திருவருளுக்குப் பாத்திரமாக இருந்து விழிப்புணர்வுடன் ஆராய்ந்து அறிந்தாலன்றி, இதன் மறைபொருளை விளங்குவது கடினம். திருவருளே பெரும் சக்தியாக உள்ளிருந்து முழுவதும் உண்மைத்தன்மையைக் கிரகித்து உணரும் ஆற்றலைக் கொடுக்கிறது. கிரகிக்கும் ஆற்றல் தானே தனக்குப் பெறவேண்டிய செயல்; மற்றவர் மூலம் பெற முடியாது. இதிலிருந்து விளங்குவது என்னவென்றால் சுட்டறிவாலோ, அல்லது புறக்கல்வி கேள்விகளாலோ பரம்பொருளை முழுமையாகத் தெளியமுடியாது. முழுமையான தெளிவு பெறுவதற்கு மெய்யுணர்தல் ஒன்றே போதும். எனவே உள்ளிருந்து தோன்றுவதே யோகசுவாமிகள் அருளிய முழுதும் உண்மையாகும். இதை அடைவதற்கு மனதில் எண்ணங்கள் உண்டாகாமல் மனதை வெற்றிடமாக்க வேண்டும். வெற்றிடமான மனம் திருவருளுக்கு பாத்திரமாகும்.

சிவசக்தியே முருகப்பெருமானுடைய சொரூபம். சிவனுக்கும் சக்திக்கும் இடையே வேறுபாடு இல்லாதது போன்று, சிவனுக்கும் முருகனுக்கும் இடையே வேறுபாடுகள் இல்லை எனச் சுவாமிகள் தெளிந்தார். முருகனை வணங்கி முருகன் அருளாலேயே ஆன்மிக விடுதலை பெற்று "முழுதும் உண்மை" என்பதை உள்ளொளி மூலம் விளங்கப் பெற்றார். தந்தையாகிய சிவனுக்கே முருகன் உபதேசம் செய்தவன் அல்லவா. அந்த வகையில் அவன் அருளால் உண்மை யாது என்பதை யோகசுவாமிகள் உணரப்பெற்றது ஆச்சரியம் இல்லை. முருகன் வழிபாட்டால் நான் எனது என்னும் அகங்காரம் நீங்கப் பெற்று நாமும் பலன் அடைவோம்

# திருப்புகழ் கிடைத்த கதை

இன்று நாம் போற்றிப்புகழும் திருப்புகழ் நமக்குக் கிடைக்கக் காரணமாக அமைந்த இருபத்துநான்கு வருட உழைப்பை நாம் அறிவோமா? அதற்கு யார் காரணம் என்பதை வரலாறு அறியுமா?

அருணகிரிநாதர் கி.பி. 15 ஆம் நூற்றாண்டில் திருவண்ணாமலையில் பிறந்து வாழ்ந்தவர். அவர் முருகக்கடவுள் மீது இயற்றிய ஒரு பக்தி நூல் திருப்புகழ் ஆகும். திருப்புகழில் 1307 இசைப்பாடல்கள் உள்ளன. அதாவது அத்தனைதான் கிடைத்துள்ளன. இன்னமும் கிடைக்காதது பல நூறு ஆகும். இவற்றுள் 1088 உக்கும் மேற்பட்ட சந்த வேறுபாடுகள் உள்ளன என்று கணித்திருக்கிறார்கள். திருப்புகழிலுள்ள இசைத்தாளங்கள் இசை நூல்களிலடங்காத தனித்தன்மை பெற்றவை.

கைத்தல நிறைகனி அப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுகன் ...... அடிபேணிக்
கற்றிடும் அடியவர் புத்தியில் உறைபவ
கற்பகம் எனவினை .....

என்றுதான் திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள் தனது அனைத்துச் சொற்பொழிவுகளையும் தொடங்குவார். அவர் மூலமே அடியேனுக்கும் திருப்புகழ் அறிமுகம் ஆனது.

அத்தகைய திருப்புகழ் நமக்குக் கிடைக்கத் தனிப்பட்ட ஒரு அரசு அலுவலரின் தன்னலமற்ற தொண்டும், ஆர்வமுமே காரணமாக அமைந்தன. அந்த போற்றுதலுக்குரிய அறிஞர் திரு வ. த. சுப்பிரமணிய பிள்ளை ஆவார்.



திருப்புகழ் நமக்குக்கிடைக்கச் சுவையான ஒரு காரணமும் உள்ளது. அதைக் குறித்து ஒரு கட்டுரையைத் தமிழ் இந்து 9.8.2014 அன்று வெளியிட்டிருந்தது. அதை இப்போது பார்ப்போம்.
திரு வ.த.சுப்பிரமணிய பிள்ளை 1871-ம் ஆண்டு மஞ்சக்குப்பம் வழக்காடு மன்றத்தில் மாவட்ட முன்சீப்பாகப் பணிபுரிந்த காலம் அது. சிதம்பரம் நடராஜர் கோயில் சம்பந்தமான வழக்கு நடைபெற்றுக் கொண்டிருந்தது. இந்த வழக்கில் சாட்சிக் கூண்டில் நின்ற தீட்சிதர்கள் தங்களுடைய வாதத்தில் “கோயில் உரிமை தீட்சிதர்களாகிய எங்களுக்கே!” என்று பொருள் தரக் கூடிய திருப்புகழ் பாடலை மேற்கோள் காட்டி வாதாடினர்.
அப்பாடலின் வரி:
“தாது மலர் முடியாலே... **வேத நூன்முறை வழுவாமே தினம் வேள்வியால் எழில் புனை மூவாயிர மேன்மை வேதியர் மிகவே பூசனை புரிகோவே**”
(கடவுளே! வேதநூலில் கூறப்பட்ட முறைப்படி தவறாது யாகங்கள் செய்யும் மூவாயிரவர் என்ற பெருமை பெற்ற அந்தணர்களால் தினமும் துதிக்கப்படுபவரே நீங்கள்)

தீட்சிதர்கள் கூறிய வாசகத்தைக் கேட்டவுடன் **வ. த. சுப்பிரமணிய பிள்ளை** அவர்களுக்கு அக்கணமே பொறி தட்டியது. **அருணகிரி நாதர் பாடிய பதினாறாயிரம் பாடல்களில் ஒரு ஆயிரம்**

**பாடல்களையாவது சேகரித்து அச்சிட்டு வெளியிடவேண்டும் என்று திட்டமிட்டார்**. தலங்கள் தோறும் சென்று செல்லேறிப் போன பல வழுக்கள் பொதிந்திருந்த திருப்புகழ் ஓலைச்சுவடிகள் பலவற்றைச் சேகரித்து, ஒத்துப்பார்த்து, பாட பேதங்களைக் கண்ணுற்று வெவ்வேறு சுவடிகளில் காணும் வித்தியாசங்களைப் பண்டிதர்களைக் கொண்டு திருத்தி அச்சிட்டுப் புத்தக வடிவில் யாவரும் எளிதில் பெறுமாறு செய்த ஏந்தல் வ.த.சுப்பிரமணிய பிள்ளை.

***அரசாங்கப் பணிகளுக்கிடையில் தமக்குத் தெரிந்த பல நண்பர்களிடம் தொடர்பு கொண்டு திருப்புகழ் ஏட்டுச் சுவடிகளைத் தேடத் தொடங்கினார். ஆங்காங்கு அவை கிடைக்கத் தொடங்கின. 1876-ம் ஆண்டு ஆறுமுக நாவலர் எழுதிய சைவ வினா-விடையில் திருப்புகழின் ஆறு பாடல்கள் இருந்தன. 1878-ம் ஆண்டு ஜூன் மாதம் 28-ம் தேதி அன்று காஞ்சிபுரம் புத்தேரி தெரு அண்ணாமலை பிள்ளை என்பவரிடமிருந்து 750 பாடல்கள் கொண்ட ஏட்டுச்சுவடிகள் கிடைத்தன. அதே வருடம் பின்னத்தூர் சீனிவாச பிள்ளையிடம் 450 பாடல்களும், பின்னர் அவரிடமே 150 பாடல்களும் கிடைத்தன. 20.03.1881-ல் கருங்குழி ஆறுமுக ஐயர் என்ற வீர சைவரிடமிருந்து 900 பாடல்கள் திருப்புகழ்ச் சுவடிகள் கிடைத்தன. 1903-ம் ஆண்டு திருமாகறல் என்ற ஊரில் 780 பாடல்கள் கிடைத்தன.***

உ.வே.சாமிநாதையர் தமிழகமெங்கும் தமிழ் இலக்கிய ஏட்டுச் சுவடிகளைத் தேடிக் கொண்டிருந்த காலம் அது. வ.த.சுப்பிரமணிய பிள்ளையவர்கள், உ.வே.சாவிடம் தொடர்பு கொண்டு திருப்புகழ் சுவடிகளைக் கண்டால் தெரிவிக்குமாறு வேண்டிக் கொண்டார். இதை உ.வே.சா, தனது "என் சரித்திரம்" நூலில் பதிவுசெய்துள்ளார்.

**ஓலைச்சுவடிகளின் குறைகளைக் களைந்து சீர் செய்வதற்கு மஞ்சக்குப்பம் பள்ளி ஆசிரியர் சிவசிதம்பர முதலியார், சேலம் சரவணப்பிள்ளை, ஆனந்தராம ஐயர் போன்றவர்கள் ஆற்றிய பங்கு பெரிது.**

***திருப்புகழ் முதல் பதிப்பை 05.06.1891 அன்று சிவசிதம்பர முதலியார் செப்பம் செய்து சீர்திருத்தி வ. த. சுப்பிரமணிய பிள்ளை அவர்களிடம் ஒப்படைத்து விட்டார். 9.04.1895-ம் ஆண்டு திருத்தம் செய்யப்பட்ட திருப்புகழ் பாடல்களை அச்சுக்குப் பதிப்பிக்கக் கொடுத்தார்.*** திருப்புகழ் கட்டம் செய்யப்பட்டு அழகிய வடிவில் அச்சில் பதிப்பித்து முதன்முதலாக புத்தக வடிவில் பிள்ளையவர்கள் அப்போது பணிசெய்து கொண்டிருந்த திருத்துறைப்பூண்டிக்கு அனுப்பப்பட்டது. புத்தக வடிவில் திருப்புகழைக் கண்ட பிள்ளையவர்கள் பேரானந்தம் அடைந்தார். அதே சமயம் ஓலைச்சுவடியிலிருந்து பெயர்த்து எழுதிச் **செப்பம் செய்து தந்த சிவசிதம்பர முதலியார் அச்சு வடிவத் திருப்புகழ் புத்தகத்தைக் காணாமலேயே இறந்துபோய் விட்டார்**.

வ. த. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் திருப்புகழைப் புத்தக வடிவில் கண்ட அன்று தனது டைரிக்குறிப்பில் 09.04.1895-ம் ஆண்டு இவ்வாறாகக் குறிப்பிடுகிறார். **"கடந்த 24 வருடங்களுக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட திருப்புகழ் பதிப்பு வேலை முடிய இவ்வளவு காலம் சென்றுள்ளது. இப்போதும் பாதி அளவே முடிந்துள்ளது"** என்று கவலையுடன் குறிப்பிட்டுள்ளார். 1909ஆம் ஆண்டு சில திருத்தங்களுடன் இரண்டாம் பதிப்பு வெளிவந்தது. அதே ஆண்டு ஏப்ரல்-16ஆம் தேதி இரவில் படுக்கைக்குச் சென்றவர் நள்ளிரவில் உயிர் துறந்துவிட்டார். வ.த.சுப்பிரமணிய பிள்ளையின் புதல்வர்கள் வ.சு.செங்கல்வராய பிள்ளையும், வ.சு.சண்முகம் பிள்ளையும் புதிய பாடல்களை இணைத்துத் திருப்புகழினைத் தொடர்ந்து வெளியிடலாயினர்.

வ.த.சுப்பிரமணிய பிள்ளையின் விருப்பப்படி அவருடைய சமாதி, திருத்தணி கோயிலை நோக்கியபடி அமைக்கப்பட்டுள்ளது.

**தகவல் - முனைவர் சாரதா நம்பி ஆரூரன்**



உ

சிவயோகம்

SIVAYOGAM

(Charity Reg No: 1050398 Since: 1995)



# இந்து கலாசார மையம்

## அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மன் திருக்கோயில்

128, Aurelia Road, Croydon CRO 3BF. Tel: 020 8767 9881









சைவப் பெருமக்கள் அனைவருக்கும் வணக்கம். உங்கள் அனைவருக்கும் அம்பாளின் அருள் கிடைக்க எல்லாம் வல்ல இலண்டன் அருள்மிகு முத்துமாரி அம்மனைப் பிரார்த்திக்கின்றோம். அம்பாளின் அருளாலும், அடியார்களின் நன்கொடைகளாலும் அம்பாளுக்கு ஆலயம் அமைப்பதற்கான இடம் "சிவயோகம்" அறக்கட்டளைக்குச் சொந்தமாக வாங்கப்பட்டுள்ளபோதிலும் பணப் பற்றாக்குறை காரணமாக ஆலயம் அமைக்கும் பணி தாமதமாகிறது. அம்பாளுக்கு ஆலயம் அமைக்கும் வேலையைத் துரிதப்படுத்துவதற்கு அடியார்கள் தங்களால் ஆன உதவியைச் செய்யுமாறு தாழ்மையாகக் கேட்டுக்கொள்கின்றோம். தங்கள் நன்கொடையை ஆலயத்தில் நேரடியாகப் பணமாகவோ அல்லது காசோலையாகவோ அல்லது வங்கியூடாகவோ வழங்கலாம்.

வங்கிக் கணக்கு விபரம் **Name: SIVAYOGAM BUILDING FUND | Account No: 20057541 | Sort Code:- 20 21 78| Bank: BARCLAYS**

நன்றி

ஆலய நிர்வாகத்தினர்

f Muththumari Amman Temple Sivayogam



"Ammanai Saran Adainthal Athika Varam Peralam"

## SHRI KANAGA THURKKAI AMMAM (HINDU) TEMPLE TRUST

Founded on 10 - 08 - 1991 Charity No: 1014409

5 CHAPEL ROAD LONDON W13 9AE | TEL: TEL: 020 8810 0835/020 8840 0485

www.ammanealing.org | Email: info@ammanealing.org

அம்பிகையின் திருவருளைப் பெற

இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்டு பெற்றோரை இழந்த குழந்தைகள் மற்றும் ஆதரவற்ற முதியவர்களுக்கு

# அன்னதானம்

## செய்ய அரிய வாய்ப்பு

உங்கள் குழந்தைகள் மற்றும் பெற்றோர்களின்

பிறந்தநாள், திருமணநாள், நினைவுநாள் மற்றும்

உங்கள் இல்ல சிறப்பு விழா தினங்களில்

**அன்னதானம் செய்யலாம்**

உங்களின் £100 பங்களிப்பு

**பலபேரின் வயிறு நிரம்பி மனம் குளிரும்**

இப் புனிதப் பணியில் கைகோர்க்கும் அடியவர்களுக்கு உதவுவதற்கு தயாராக இருக்கின்றோம்

(அன்னதானம் கொடுக்கும் நிகழ்வு புகைப்படம் மற்றும் காணொளி உங்களுக்கு கொடுக்கப்படும்)

## YOU CAN CONTRIBUTE FOOD

**DONATION £100**

NO ADMINISTRATION CHARGES

**To Orphanages or Elders Home in Sri Lanka**

On your Birthday, Wedding Day Remembrance Day or Any other Special Function

**We will be providing Photos & Video of the event to you**

**Bank Details: SKTA Temple Trust**

**LLOYDS BANK | SOFT CODE: 30-98-91 | ACCOUNT NO: 02717646**

அன்னையின் பணியில் இணைந்திடுங்கள்

அவள் அருளைப் பெற்றிடுங்கள்

**Please donate as much as you can!**

"Ammanai Saran Adainthal Athika Varamperalam"

SHRI KANAGA THURKKAI AMMAN (HINDU) TEMPLE TRUST

5 Chapel Road, London W13 9AE. Phone:0208 810 0835

Founded:10-08-1991 Charity No:1014409

www.ammanealing.org Email:info@ammanealing.org






எமது ஆலயத்தில் கீழ்வரும் பணிநிலைகளுக்கான தகுதியான விண்ணப்பங்கள் வேண்டப்படுகின்றன. தங்கள் பற்றிய முழு விபரங்களுடன் மேல் உள்ள மின்அஞ்சல் முகவரிக்கு விண்ணப்பிக்கவும். REF:SKTAT/04/22

**பணிநிலை 1 மகோற்சவ சிவாச்சாரியார் (Hindu religious workers with non-pastoral role)**

**தகமைகள்:** விண்ணப்பதாரி மகோற்சவ குருவாக தொடர்ந்து 5 ஆண்டுகளுக்கு குறையாமல் பிரபல்யமான ஆலயங்களில் பணியாற்றி இருக்க வேண்டும்.

**கடமைகள்:** ஆகம விதிமுறைப்படி ஆலயத்தில் மகோற்சவ பூசைகள் செய்தல்

**வேதனம்:** பிரித்தானிய வேதன முறைமகளுக்கமைவானது. விண்ணப்பதாரிகளின் சிறப்புத் தகமைகளை கவனத்தில் கொண்டு நிர்ணயம் செய்வதுடன் அடியார்கள் வழங்கும் தட்சணை பங்கிட்டு வழங்கப்படும்

விண்ணப்ப முடிவு திகதி: 10-04-2022 [ 10 April 2022 ]

**பணிநிலை 2 நாதஸ்வர தவில் கலைஞர்கள் (Hindu religious (Musicians) workers)**

**தகமைகள்:** நாதஸ்வர தவில் மேதைகளுக்கான சான்றிதழ்களைக் கொண்டிருப்பதுடன் தமது பிராய காலத்தில் இருந்து இப்பணியைச் செய்து கொண்டிருப்பவராக இருக்கவேண்டும்

**கடமைகள்:** ஆலய பூசைகாலங்களில் மங்கள இசை இசைத்தல்

**வேதனம்:** பிரித்தானிய வேதன முறைமகளுக்கமைவானது.

விண்ணப்ப முடிவு திகதி: 10-04-2022 [ 10 April 2022 ]


SURYA JEWELLS
"உண்மை வெல்லும்"
நியாயமான வட்டி வீதத்தில்
தங்க நகைகள் அடகு பிடிக்கப்படும்
விதவிதமாய் வித்தியாசமான டிசைன்கள்
உங்கள் அழகிற்கு அழகூட்டிடும்
பழைய பவுண்களைக் கொடுத்து
புதிய நகைகளை வாங்கலாம்
அதுமட்டுமல்ல
நீங்கள் செய்யும் ஆடர்கள்
குறித்த நேரத்தில்
செய்து தருவதில் வல்லுநர்கள்
அதி குறைந்த வட்டி வீதத்தில்
வாரத்தில் 7 நாட்களும்
அடகு பிடிக்கப்படும். (2.5%)
மலிவான விலையில்
தரமான தங்கத்திற்கு
Eastham ல்
சூரியா ஜுவல்ஸ்
உங்கள் நகைகளை வேறு இடத்தில் கூடிய வட்டி வீதத்தில் அடகு வைத்திருந்தால்
எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்.
Tel: 020 8552 2224
292 High Street North, London E12 6SA

உ

சைவ முன்னேற்றச் சங்கம்

# அருள்மிகு ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் சந்நிதி விசேட நாள்கள்

## ஏப்பிரில் (14-04-2022) தொடக்கம் ஜுலை (25-07-2022) வரை

| | | |
|---|---|---|
| *16.04.2022* | சனி | சித்திரைப் பௌர்ணமி |
| *24.04.2022* | ஞாயிறு | நடேசர் அபிஷேகம் |
| *26.04.2022* | செவ்வாய் | திருநாவுக்கரசர் குருபூசை |
| *28.04.2022* | வியாழன் | பிரதோஷம் |
| *13.05.2022* | வெள்ளி | பிரதோஷம் |
| *18.05.2022* | புதன் | திருஞானசம்பந்தர் குருபூசை |
| *27.05.2022* | வெள்ளி | பிரதோஷம் |
| *04.06.2022* | சனி | சேக்கிழார் குருபூசை |
| *12.06.2022* | ஞாயிறு | பிரதோஷம், வைகாசி விசாகம் |
| *26.06.2022* | ஞாயிறு | பிரதோஷம் |
| *27.06.2022* | திங்கள் | சிதம்பரேஸ்வரர் கொடியேற்றம் |
| *03.07.2022* | ஞாயிறு | மாணிக்கவாசகர் குருபூசை |
| *05.07.2022* | செவ்வாய் | சிதம்பரேஸ்வரர் தேர் |
| *06.07.2022* | புதன் | நடேசர் அபிஷேகம், கொடியிறக்கம் |
| *11.07.2022* | திங்கள் | பிரதோஷம் |
| *16.07.2022* | சனி | ஆடிப்பிறப்பு |
| *25.07.2022* | திங்கள் | பிரதோஷம் |

*பிரதோஷ காலத்தில் ஆலயத்தில் விசேஷ பூசை, வழிபாடுகள் நடைபெறுகின்றன.*

*கோயில் திறந்திருக்கும் நேரம்:*

*காலை: 8.30 மணிமுதல் 13.00 மணிவரை*
*மாலை: 5.00 மணிமுதல் 9.00 மணிவரை*

ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேசுவரப் பெருமானை வழிபட்டுத் திருவருள் பெற்று உய்யுமாறு அடியார்களைப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

*"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"*

# தானமும் தருமமும்

## செல்வி வே.கிருத்திகா, மிருசுவில்

நம்மால் முடிந்தபோதெல்லாம் தான, தருமங்கள் செய்ய வேண்டும் என்று முன்னோர்கள் சொல்லியிருக்கின்றார்கள். அப்படித் தான தருமங்கள் செய்வதையும் மனமுவந்து செய்தால்தான் அதற்குரிய பலன்கள் கிட்டும் என்று புராணங்கள், இதிகாசங்கள் கூறுகின்றன. இக்கருத்தையே பகவான் கிருஷ்ண பரமாத்மாவும் எடுத்துக் கூறியிருக்கிறார்.

பஞ்சபாண்டவர்களில் மூத்தவரான தருமருக்கு மனதில் ஒரு குறை இருந்தது. ஒரு முறை கிருஷ்ணபிரானைச் சந்தித்தபோது, "கிருஷ்ணா வெகுகாலமாக எனக்கு என் மனதில் ஒரு சந்தேகம் உண்டு. அதைக் உன்னிடம் கேட்கலாமா?" என்றார். "இது என்ன தருமா? நீ உன் சந்தேகங்களையெல்லாம் என்னிடம்தானே கேட்கிறாய்? கேள்? எனக்குத் தெரிந்ததை உனக்குச் சொல்லாமல் வேறு யாருக்குச் சொல்வது!" என்றார்.

"பாண்டவர்களாகிய எம்மைப் பற்றி என்ன நினைக்கிறாய்?" இது தருமரின் முதற் கேள்வி? "நீதி தவறாமல் இருப்பதிலும், வேண்டுவோர்க்கு உதவி செய்வதிலும், மனிதனாக வாழ்வதற்கு வேண்டிய அத்தனை குணங்களையும் கொண்டு வையகம் போற்ற வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள். இதைவிட வேறு சிறப்பு இருக்கின்றதா என்ன?" என்று விடை பகிர்ந்தார் கிருஷ்ண பரமாத்மா. "அப்படியென்றால் எல்லோரும் ஏன் கர்ணனையே 'கொடைவள்ளல் கர்ணன்' என்று அவனைப் புகழ்கிறார்கள்? ஒன்றும் புரியவில்லை? தான தர்மங்களில் நாங்கள் ஏதும் குறை வைக்கவில்லையே? பதில் தெரிந்தால் சொல்லுங்கள் கிருஷ்ணரே?" இது தருமரின் இரண்டாவது கேள்வி. கிருஷ்ண பிரான் தனக்குள்ளே சிரித்துக் கொண்டார். "தருமா அதுதான் உனக்குள்ளே இப்பொழுது குமைந்து கொண்டிருக்கும் பிரசினையா?, சரி, உனது சகோதரர் அனைவரையும் அழைத்து வா? அவர்கள் எல்லோரினதும் முன்னிலையில் உனது சந்தேகத்தைத் தீர்த்துவைக்கிறேன்" என்றார் கிருஷ்ண பரமாத்மா. தருமரும் அதனை ஒப்புக்கொண்டு தன் சகோதரர்கள் பீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன் ஆகியோரிடம் விடயத்தைக் கூறினார். "வாருங்கள்! உங்களுக்கும் அந்தச் சந்தேகம் இருக்கும் ஆகையால் கிருஷ்ணரிடம் விளக்கம் கேட்போம்" என்று கூறி அவர்களையும் அழைத்துக் கொண்டு மாயோனாகிய கிருஷ்ணனிடம் தருமர் வந்தார். கிருஷ்ணர் அனைவரையும் வரவேற்று தருமரின் சந்தேகத்தை எடுத்துக் கூறி, உங்களுக்கு இத்தகைய சந்தேகம் இருக்கிறதா எனக் கேட்டார். எல்லோரும் அமைதியாக இருக்கவே, சரி எல்லோரும் என்னுடன் வாருங்கள் என்றார்.

ஒரு பெரிய பை நிறையத் தங்கக் காசுகளையும், மற்றொரு பையில் வெள்ளிக் காசுகளையும் நிரப்பிப் பாண்டவர்களின் கையில் கொடுத்தார். "இன்று மாலை ஆவதற்குள் இக்காசுகள் அனைத்தையும் நீங்கள் தானம் செய்ய வேண்டும் அப்படிச் செய்துவிட்டால் உங்களை விடக் கொடை வள்ளல் வேறு யாருமே இல்லை என்ற பெயரைப் பெறுவீர்கள்" என்று சொல்லித் திரும்பினார்.

பாண்டவர்கள் கைகள் நிறைய தங்கக் காசகளையும் வெள்ளிக் காசுகளையும் அவ்வழியே போகிறவர்கள் வருகிறவர்கள் எல்லோருக்கும் அள்ளி அள்ளிக் கொடுத்தார்கள். மாயோன்தான் குறும்புக்காரன் ஆயிற்றே! அள்ள அள்ளக் குறையாமல் பைகளில் காசுகள் அப்படியே இருந்தன. செய்வதறியாமல் பாண்டவர்கள் மாலையில் கண்ணபிரான் வந்ததும் தங்கள் இயலாமையைக் கூறினார்கள். ஸ்ரீகிருஷ்ணர் உடனடியாக கர்ணனை வரவழைத்து, "கர்ணா!

பைகளில் இருக்கும் செல்வங்களைத் தானமாகக் கொடுக்க வேண்டும். அதுவும் உடினடியாக விரைந்து கொடுத்து முடிக்க வேண்டும்" என கூறினார்.

சரியென ஒப்புக்கொண்ட கர்ணன் பார்வையில் அவ்வழியாகத் தள்ளாடித் தள்ளாடியபடியே வந்த ஒரு வயோதிப வழிப்போக்கன் தெரிந்தார். உடனே அந்த வயோதிபரைத் தானே கைத்தாங்கலாக அழைத்து வந்து "ஐயா! பெரியவரே! தங்களுக்கு ஏதாவது உதவி செய்ய விரும்புகிறேன்" என்று கர்ணன் கூற, வயோதிபப் பெரியவரோ, "வேண்டாம் என்று தங்களிடம் சொல்லும் மன நிலையிலா நான் இருக்கிறேன். தாங்கள் கொடுப்பது எதுவாயினும் கொடுங்கள் நான் மகிழ்வுடன் ஏற்றுக் கொள்கிறேன்" என்று உடல் தடுமாற, நாக்கு குழறியபடியே அந்த வயோதிபர் கூறினார். கர்ணன் தன்னிடம் கிருஷ்ணர் தந்த தங்கக் காசுகள், வெள்ளிக் காசுகள் உள்ள இரண்டு பைகளையும் அந்தப் வயோதிபப் பெரியவரிடமே கொடுத்தான்.

இப்போது கிருஷ்ண பரமாத்மா பாண்டவர்களைப் பார்க்க, அவர்கள் ஐவரும் ஒருமித்த குரலில் "கர்ணன் எப்பவுமே கொடை வள்ளல்தான். அவனுக்கு நிகர் எவருமே இல்லை" என்றனர்.

தனக்கு மிஞ்சியது பின்தான் தானமும் தருமமும் என்றும் சொல்வார்கள். தருமம் செய்கிறேன் என்று தனது தேவைகளுக்கென்று வைத்துக் கொண்டுதான் தருமம் செய்ய வேண்டும் என்பதிலும் ஒரு உண்மை இருக்கிறதல்லவா! முன்பெல்லாம் தமிழர்களின் கலாசாரத்தில் சேமிப்பு என்று ஒரு விடயம் இருந்தது. உலையில் அரிசியை இடும்போது அதில் ஒரு பிடி அரிசியை எடுத்துப் புறம்பாக வைத்திருப்பார்கள். எதற்குத் தெரியுமா? ஏழைகள் யாராவது, "அம்மா பிச்சை தாருங்கோ" என்றும் "அம்மா! கதிர்காமம் யாத்திரை போகிறோம், அரிசி தாருங்கோ!", என்றும் "அம்மா! நேர்த்தி வைத்திருக்கிறேன். அதற்காகத் தெருத் தெருவாய் மடிப்பிச்சை எடுத்து. அம்மாளுக்கு பொங்கல் படைக்கப் போகிறேன்!" என்றும் வரும்போது இல்லை என்று சொல்லாமல் கொடுப்பதற்காகவும் தேவையேற்படும்போது உபயோகத்துக்கு எடுப்பதற்காகவும் தான் இந்தச் சேமிப்பு. தருமம் செய்வது ஒரு மனிதாபிமானம். மனதுக்கு இதம் தருவது. ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காணலாம் என்பார்கள். அதை அநுபவத்தால் உணரலாம். தருமம் செய்தவர்களுக்கு எத்தகைய இடர்கள் நேர்ந்தாலும் கடவுள் அவர்களைக் கைவிடார் என்பதை அநுபவம் மூலமாக உணர்ந்தவர்கள் பலர் உளர்.



# பாஞ்சாலி சபதம்

**- அநுஜா -**

மகாபாரதம் உலகனைத்தும் புகழ்பெற்ற சிறந்த காவியம். அதில் பாஞ்சாலி சபதம் என்ற பகுதி முக்கியமானது. பாஞ்சாலியின் சபதம் பாரதப்போர் நிகழக் காரணமானது என்றால் மிகையாகாது. அந்தப் போரில் உறவினரைக் கொல்வதா என்று சிந்தித்து அருச்சுனன் மனம் தளர்ந்தான். அருச்சுனனுக்கு வாழ்வியல் தத்துவத்தை விளக்க எண்ணிப் பகவத்கீதையைப் போதித்தார் அவனின் தேர்ச் சாரதியாக இருந்த கிருஷ்ணன். அந்தப் பகவத்கீதை இன்று மனிதவாழ்வில் பலருக்கு வழிகாட்டியாக விளங்குகிறது.

இத்தகைய முக்கியமான பாஞ்சாலிசபதம் பகுதியைப் பாரதியார் தேர்ந்தெடுத்து தன் கவித்திறத்தாலும் கற்பனை வளத்தாலும் தமிழ்மொழிப் புலமையாலும் மிகச் சுவாரசியமான காவியமாக வடிவமைத்துள்ளார். தனது முகவுரையில், “வியாசர் பாரத”க் கருத்தைத் தழுவிய தாகவும் ஆனால் தமிழ்நடைக்குத் தானே பொறுப்பாளி என்றும் பாரதியார் குறிப்பிட்டுள்ளார். எவரும் படித்து மகிழ, எளிய நடையில் அமைந்தது இது. அதிலிருந்து சில தேர்ந்த பகுதிகளை இங்கே தருகின்றேன். இவை நான் சுவைத்த பகுதிகள்.

சரஸ்வதியை வாழ்த்தி வணங்கியே தனது கதையைப் பாரதியார் ஆரம்பிக்கிறார்.

வாணியைச் சரண் புகுந்தேன் - அருள்
வாக்களிப்பாள் எனத் திடமிருந்தேன்

கலைவாணியின் அருளால் அவர் படைத்த காவியம் படிப்போர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும்.

அத்தனாபுரத்தில் தருமர் செய்த யாகத்துக்குச் சென்றுவந்த துரியோதனன் யாகத்தின் சிறப்பையும் அங்கு வந்திருந்த மன்னர்கள் பாண்டவரை வாழ்த்திய விதத்தையும் அவர்கள் கொண்டுவந்து குவித்த பரிசுப் பொருள்களின் அளவற்ற பெறுமதியையும் எண்ணி எண்ணி மனம் பொறாமையால் குமுறுகின்றான். அதை இப்படிப் பாடுகிறார் பாரதி,

குன்றமொன்று குழைவுற்று இளகிக்
குழம்புபட் டழிவெய்திடும் வண்ணம் ..

மலையிலுள்ள பாறைகள் நிலத்துள் ஏற்பட்ட வெப்ப மிகுதியால் உருகித் தீக்குழம்பாகி எரிமலையாக வெடித்துப் பரவுதல்போலத் துரியோதனன் மனமும் இருந்தது. செய்வதறியாது தடுமாறி, தளர்ந்து போன நிலையில் தன் மாமனே தன்னைத் தேற்றி வழிகாட்ட வல்லவன் என்று துணிந்து அவனிடம் செல்கிறான், தன் வேதனையைக் கொட்டுகிறான்.

பாண்டவர் முடியுயர்த்தே இந்தப்
பார்மிசை உலவிடு நாள்வரை நான்
ஆண்டதோர் அரசாமோ? - எனது
ஆண்மையும் புகழுமோர் பொருளாமோ?

மனதில் எதைக்கண்டு பொறாமை கொண்டானோ அதைத் தன் மாமனிடம் கொட்டுகிறான்.

உலகு தோன்றிய நாள்முத லாகநம் சாதியில் - புகழ்
ஓங்கி நின்றார் இத் தருமனைப் போலெவர் - மாமனே
இலகுபுகழ் மனுவாதி முதுவர்க்கும் மாமனே - பொருள்
ஏற்றமும் மாட்சியும் இப்படி உண்டுகொல்? மாமனே!

துரியோதனனின் வயிற்றெரிச்சலை இவ்வாறு பாடுகிறார் பாரதியார்.

மேலும் தான் தடுக்கி விழுந்தபோது அங்குள்ளவர்கள் கேலியாகச் சிரித்தார்கள் . அது மட்டுமா? அந்த ஏந்திழையால் திரௌபதியும் சிரித்தாளே! எண்ணிப்பார். . என் மாமனே! தீச்செயல் , நற்செயல் ஏதேனும் ஒன்று செய்து நாம் அவர் செல்வம் கவர்ந்து அவரைத் தெருவிலே விடவேண்டும். என்று துரியோதனன் சொன்னதுமே சகுனி,

"அட இன்று தருவேன் வெற்றியே - இதற்கு
இத்தனை வீண்சொற்கள் வளர்ப்பது ஏன்? .

நான் சொல்வதைக் கேள், கவனமாகக் கேள். என்று சொல்லி, நீயும் அவர்களைப்போல் மண்டபம் கட்டுவாய். பின்பு அவர்களை விருந்துக்கு அழைக்கவேண்டும். அவர்கள் உன் தந்தையார் அழைத்தால் கட்டாயம் வருவார்கள். அப்போது அவர்களைச் சூதுக்கு அழைப்போம் "ஒரு நாழிகைப் பொழுதிலேயே அவர்களைச் சூதில் வென்று அவர்கள் செல்வம் எல்லாம் உனக்கு வரும்படி செய்வேன்" என்றான் சகுனி.

துரியோதனன் உள்ளம் உவகையால் பொங்கச் சகுனிக்குப் பொன்மாலை சூட்டி மார்புறக் கட்டித்தழுவி உலகில் உன்னைப்போல் எனக்கு இனியவை சொல்பவர் எவருமே இல்லை என்றான். பின்பு மாமனும் மருகனும் திருதராட்டிரனின் அவைக்குச் செல்கின்றனர்.

அங்கு அவரை வணங்கி அமர்கின்றனர். சகுனி தந்தையின் உள்ளம் பாசத்தால் உருகும் வண்ணம் "மகன் துயரத்தால் மிக வாடிப்போய் வாழ்வை வெறுத்தவன்போல இருக்கிறான். அதன் காரணம் என்னவென்று கேளுங்கள்" என்கிறான். திருதராட்டிரன் அதைக் கேட்டு மிகவும் வருந்தி, "உனக்கு என்ன குறை? இவன் வார்த்தையில் ஏதாவது உண்மையுண்டோ? செல்வம் குறைவற உள்ளது. பணி செய்ய அமைச்சர்கள் உளர். வரும் துன்பம் தவிர்க்க அமைச்சர்கள், இதற்கும் மேலாக புகழோங்கிய பாண்டவ சகோதரர்கள் இருக்கிறார்களே!இவ்வளவும் இருந்தும் துன்பமேன்?"

இதனைக் கேட்டதும் துரியோதனன் கொதித்தெழுந்தான். தன்னை மறந்து அவன் கத்துவதைப் பாரதியார் பின்வருமாறு வர்ணிக்கிறார்

வெந்தழல் போலச் சினங்கொண்டே - தன்னை
மீறிப் பலசொல் விளம்பினான் - இவன்
மந்த மதிகொண்டு சொல்வதை - அந்த
மாமன் மதித்துரை செய்குவான் - ஐய!
சிந்தை வெதுப்பத்தினாலவன் - சொலும்
சீற்ற மொழிகள் பொறுப்பையால்

சகுனி தந்திரமாக, அவன் என்னைத்தான் தன்குறைபற்றிச் சொல்லச்சொன்னான். நான்தான் அவனை அழைத்துவந்தேன். கோபம் வந்தவர்கள் இப்படிப் பேசுவது இயற்கைதானே! எனச் சமாதானம் கூறுகிறான். பின்னர் துரியோதனின் குறை என்னவென்பதை விவரமாகக் கூறுகிறான்

பாண்டவர் செல்வம் விழைகின்றான் - புவிப்
பாரதத்தை வேண்டிக் குழைகின்றான் - மிக
நீண்ட மகிதலம் முற்றிலும் - உங்கள்
நேமி செலும் புகழ் கேட்கிறான்

இப்படிச் சகுனி கூறியதும்

.....அட
பிள்ளையை நாசம் புரியவே - ஒரு
பேயென நீவந்து தோன்றினாய் - பெரு

வெள்ளத்தைப் புல்லொன்று எதிர்க்குமோ - இள
வேந்தரை நாம் வெல்லலாகுமோ?

என்று கூறி, சிறுவயதிலிருந்தே இந்தப் பித்தன் அவர்களுக்குச் செய்த தீமைகள் எத்னை எத்தனை? அவற்றையெல்லாம் அவர்கள் பொறுத்து, பெரிய தந்தையாகிய எனது சொல்லுக்கடங்கிப் பணிந்து நல்லவையே செய்து புகழ்பெற்று வாழ்கிறார்கள் என்று சகுனியைக் கண்டித்துச் சொல்வதாகப் பாரதியார் பாடல்கள் மூலம் அழகாகக் காட்டுகிறார். திரௌபதி சிரித்ததைப் பெரிய பாதகமாகக் கொள்ளலாமா? பிழை பிடிப்பதற்கும் பெரிய காரணம் ஒன்றும் தேவையில்லை என்பதை,



தவறி விழுபவர் தம்மையே - பெற்ற
தாயும் சிரித்தல் மரபன்றோ? - எனில்
இவனைத் துணைவர் சிரித்ததோர் - செயல்
எண்ணரும் பாதக மாகுமோ? - மனக்
கவலை வளர்த்திடல் வேண்டுவோர் - ஒரு
காரணம் காணுதல் கஷ்டமோ? - வெறும்
அவல மொழிகள் அளப்பதேன்? - தொழில்
ஆயிரம் உண்டவை செய்குவீர்!

என்று பலவாகத் திருதராட்டிரன் நீதி வழிமுறைகளை எடுத்துரைத்ததைக் கேட்ட துரியோதனன் சீறியெழுந்து,

.....அட
தாம்பெற்ற மைந்தர்க்குத் தீது செய் - திடும்
தந்தையார் பார்மிசை உண்டுகொல்?

இவருக்கு நான்வேம்பு, பாண்டவர் சர்க்கரைபோல எனக்ககூறித் தந்தையைப் பார்த்து, "சொல்லினும் வேறெது செய்யினும் நெஞ்சில் கொண்ட கருத்தை விடுகிலேன். அந்தப் புல்லியர் பாண்டவர் மேம்படக்கண்டு போற்றி உயிர் வாழ்கிலேன்", என்றதும்
தந்தை

பெரிதாத் துயர் கொணர்ந்தாய் - கொடும்
பேயெனப் பிள்ளைகள் பெற்றுவிட்டேன்

என்று அங்கலாய்த்து, "என்னுடைய உயிரன்றோ மகனே! எனக்காக இதனை விட்டுவிடு" என்று மன்றாடுகிறான். அதற்கு துரியோதனன், "என்னுயிரை இப்போதே விட்டுவிட்டேன்" என்கிறான் என்பதைப் பாரதியார்,

.....என் சிரம் கொய்தே
நானிங்கு ஆவி இறுத்திடுவேனால் செய்யலாவது செய்குதி

என்றதும் தந்தை மனமுடைந்து சரி உன் விருப்பப்படி செய்கிறேன் என்றார். அதன்படி தம்பி விதுரனை அழைத்து உங்கள் பெரிய தந்தை உங்களை விருந்துக்கு அழைக்க விரும்பியுள்ளார் என்று என்மக்கள் பாண்டவருக்குச் சொல்லி, கூடவே என் பிள்ளையின் திட்டத்தையும் குறிப்பாகக் கூறிவிடு என்றும் விதுரனிடம் திருதராட்டிரன் சொல்கிறான்.

போச்சுது போச்சுது பாரத நாடு
போச்சுது நல்லறம் போச்சுது வேதம்
ஆச்சரியக் கொடுங் கோலங்கள் காண்போம்
ஐய! இதனைத் தடுத்தல் அரிதோ?
என்று சொல்ல,

**தொடர்ச்சி 35ஆம் பக்கம்**

# ஆனாய நாயனார்

## - சிவபுத்திரன் -

மங்கலமா மழநாட்டு மங்கலமா நகருண்
மருவுபுக ழாயனார் வளரா மேய்ப்பர்
கொங்கலர்பூந் திருக்கொன்றை மருங்கு சார்ந்து
குழலிசையி லைந்தெழுத்துங் குழைய வைத்துத்
தங்குசரா சரங்களெல்லா முருகா நிற்பத்
தம்பிரா னணைந்துசெவி தாழ்த்த வாழ்ந்து
பொங்கியவான் கருணைபுரிந் தென்று மூதப்
போதுகவென் றருளவுடன் போயி னாரே.

-ஆறுமுகநாவலர்



இசையால் வசமாகும் உலகம் என்பதற்கு இணங்கத் தன்னுடைய இசையாலே இறைவனை வசமாக்கியவன் இராவணன். தன்னுடைய இசையாலே இறைவன் பதம் அடைந்த ஒரு நாயனாரின் வரலாற்றைப் பார்ப்போம்.

தமிழகத்தில் திருச்சி மாவட்டத்தில் லால்குடி என்று தற்போது குறிபிடப்படும் நகரம் முன்பு திருத்தவத்துறை என்ற பெயரில் இருந்ததாக வரலாறுகள் தெரிவிக்கின்றன. திருமங்கலம் என்ற ஊரில் மிகவும் பெயர்பெற்ற புல்லாங் குழல் வாசிப்பதில் திறமை வாய்ந்த ஆனாயன் என்ற ஒரு மாடுகளை மேய்க்கும் இடையன் இருந்தான். மாடுகள் கூட்டத்தை மேய்ப்பவனாக இருந்தபடியால் ஆ(பசு)னாயன் என்ற அவனுடைய பெயர் காரணப் பெயராகவும் இருந்திருக்கலாம். அந்த திருமங்கலம் இருக்கும் ஆலயமொன்றில் லக்சுமியே பிரசன்னமாகி வழிபட்டதால் அப்பெயர் ஏற்பட்டதாகும் எனவும் அறியக்கிடக்கின்றது.

அந்த வளம் மிக்க கிராமத்தின் ஒரு பகுதியில் மாடுகள் மேய்பவர்கள் வாழ்ந்து வந்தார்கள். இந்த மேய்பவர்களின் சமூகத்திற்கு ஒரு நல்ல காப்பாளான ஆனாயன் என்பவன் இருந்தான். ஆனாயன் ஒரு சிறந்த சிவபக்தன். அன்பே சிவம் என்பதுபோல கடவுளையும் அன்பையும் பிரித்துப் பார்க்க முடியாது என்பதில் அவன் திடமாக இருந்தான். அவன் இசைப்பிரியனும் கூட.

ஆனாயன் தன் தொழிலில் மிகவும் நேர்மையானவனாக பசுக்களில் இருந்து பாலைக் கறந்து அதை விற்பனை செய்வதன்மூலம் பெறும் வருமானத்தில் தன் வாழ்க்கையை நடத்தி வந்தான். விவசாயத்திற்கு உபயோகப்படாமல் இருக்கும் நிலப்பகுதிகளில் தன்னுடைய பசுக்களை தானே ஓட்டிச் சென்று மேய விட்டு அக் கூட்டங்களுக்கு எதுவித நோய்களும் இடையூறுகளும் வராமல் பராமரித்து வந்தான். பசுக்களும் காளைகளும் இளங்கன்றுகளும் தாய்மை அடைந்த பசுக்கள் எனவும் பல வித நிறங்களுடன் அவை அவனுடைய பட்டியில் இருந்தன. தன்னுடைய சமூகத்தில் இருந்த பலரையும் தனக்குத் துணையாக அமர்த்தி தன் மேய்ப்பவன் தொழிலை மிக உள்ளன்புடன் நடாத்தி வந்தான் ஆனாயன். இப்படியாக ஆனாயன் தன் தொழிலை நடத்தி

வந்தாலும் அவனுடைய சமய ஈடுபாட்டால் இறை சேவை செய்ய நிறைய நேரமும் இருந்தது. இயற்கைச் சூழலில் இறைவனுக்கு தன்னை அர்பணித்து செய்யும் சேவைகள் அவனை மனத்தளவில் எதவித தடங்கலு மில்லாமல் தொடர அவனுடைய இசை அவனுக்கு பேருதவியாக இருந்தது.

அவனுக்கு தன் பால்ய வயதிலேயே புல்லாங்குழல் இசையில் மிகவும் நாட்டமிருந்தது. மிகச் சிறு பிராயத்திலேயே சிறுபிள்ளைகளுக்குப் பெற்றோர் பூவரசு இலையைச் சுருட்டி "பீப் பீப்" என்று ஊதிக்காட்டுவார்களே!, அதுபோலப் பப்பாசி இலைத் தண்டிலும் துவாரங்கள் இட்டு தானே ஊதுகுழல் தயார்செய்து படிப்படியாகப் பயிற்சி செய்து முன்னேறி, மூங்கில் குழாயைச் சுத்தம் செய்து மெருகேற்றி நேரம் கிடக்கும் போதெல்லாம் தன்னைச் சிறந்ததொரு புல்லாங்குழல் வாசிப்பவனாக மாற்றிக் கொண்டான் ஆனாயன். புல்லாங்குழல் வாசிப்பதன் மூலம் தன் இசை ஞானத்தை கூட்டிவருவதற்கு அவனின் கீழ் உள்ளவர்கள் அவன் வாசிக்கும் இசையை ரசித்தும் ஆனாயனுக்கு எதுவித இடையூறும் செய்யாமல் அவனை அதிலேயே ஊக்குவிப்பவர்களாக இருந்தார்கள். காலஞ் செல்லச் செல்ல மெருகேறிய அவனது பயிற்சி அவனை வித்தியாசமான ஒரு நிலைக்கு கொண்டு சென்றுவிட்டது.

எப்பொழுதும் போலல்லாமல் அவன் ஒருநாள் தன் வழமையான காலைக் கடன்கள் இறைவழிபாடு என எல்லாவற்றையும் முடித்துவிட்டு நறுமணமிக்க பூக்களால் ஒரு மாலையை தயார் செய்து திருநீறு தரித்து வளர்ந்த தலைமுடியை உச்சிக்குடுமியாக்கி தான் தயார் செய்த மாலையை கழுத்திலிட்டுக் கொண்டான். அவனுடைய தோற்றம் ஒரு சிவ பக்தனுடைய தோற்றமாக இருந்தது. அவன் தனது பட்டியிலுள்ள பசுக்கள், காளைகள், இளங்கன்றுகள் எல்லாவற்றையும் இன்று தானே சாய்த்துக் கொண்டு மேய்ச்சல் தரைகளை நோக்கி அவைகள் மேய்வதற்கு இட்டுச் சென்றான்.

மேய்ச்சல் தரையுள்ள வெளி பச்சைப்பசேல் என, சுற்றிவர மரங்கள் அடர்ந்த காட்டின் மையப்பகுதியில் இருந்தது. அங்கு பறவைகள், மிருகங்கள் எனப் பல ஜீவராசிகள் இருந்தன. அதிகாலைப் பொழுதல்லவா! பறவைகள் தங்கள் இனிய குரலால் தங்களுக்குள் அளவளாவுதையும், இளங்கன்றுகள் தங்களின் தாய்ப்பசுக்களை "அம்மா" என்ற குரலில் அழைப்பதையும், சில கன்றுகள் தங்கள் தாயின் மடியில் "முட்டி முட்டி"ப் பால் குடிப்பதையும், காளை ஆடுகள் தங்கள் கொம்புகளால் முட்டி விளையாடுவதையும், மைனாக்கள் பறந்து பறந்து தீனியைக் கொத்திக் கொத்தி உண்பதையும், காகங்கள் "கா, கா" வென்று தங்கள் கூட்டத்தைக் கூட்டி பகிர்ந்து உண்ணுவதையும், ரீங்காரம் செய்தபடி தேனீக்கள் நறுமணமிக்க பூக்களில் பறந்து பறந்து தேன் சேகரிப்பதையும், பார்ப்பதற்கு மிகவும் ரம்மியமான காட்சியாக இருந்தது. இன்றைய அநுபவம் ஏதோ வழமையைவிட வித்தியாசமாக ஆனாயனுக்கு தோன்றியது.

இவைகளையெல்லாம் பார்க்கப் பார்க்க ஆனாயனுக்கு தன்னையறியாமல் உடல் புளங்காகிதமடைய, தன்னுடைய புல்லாங் குழலை எடுத்துக் குழலிசை இசைக்கத் தொடங்கினான். இறைவனை வணங்கி "ஓம் நமசிவாய" என புல்லாங்குழல் மூலம் இசைப்பயணத்தைத் தொடர்ந்தான். அவ்வடர்ந்த காட்டின் மையத்திலிருந்து அவனுடைய இசை தொடரத்தொடர சுற்றியிருந்த காடுகளில் வன விலங்குகள் கூட அவனுடைய இசையில் மயங்கி ஆனாயன் இருந்த இடத்தை நோக்கி மெதுவாக வரத் தொடங்கின. பறவைகள் தங்களுடைய இரை தேடலை மறந்து தங்களின் ஒலிச் சத்தங்களை எல்லாம் இடைநிறுத்தி புல்லாங்குழல் வரும் திசைநோக்கி அமை தியாகப் புல்லாங்குழல் இசைக்கு இடையூறு ஏற்படாமல் ஆனாயனை சூழ்ந்து கொள்ளத் தொடங்கின. சிறு காடுகளில் வாழும் சிறுத்தைகள்கூடத் தங்களுடைய இரைக்காக தேடிக்கொண்டிருக்கும் பிராணிகள் ஒன்று கூடியிருப்பதை மறந்து இசையில் மயங்கியிருப்பதைக் கண்டு தாங்களும் அதில் கட்டுண்டு இசையை ரசிக்கத் தொடங்கின.

